
# சோதிடமலர்

# SOTHIDA MALAR



| | | | |
|---|---|---|---|
| சந் | லக் | | குரு |
| ராகு | சுக்ல ஹுல புரட்டாதி மீ | | |
| | | | கேது |
| சனி நெப் யுரே | | சுக் | சூ, புத, செவ் |

(17-9-89 — 16-10-89)

இவ்விதழில்...........

* ❋ இராகு - கேது மாற்றப் பலன்
* ❋ சக்தி விரதங்கள் - நவராத்திரி விரதம்
* ❋ இம்மாத வானியற் காட்சிகள்
* ❋ இவ்வருட விஜயதசமி, மஹா நவமி....
* ❋ ஆய்வுமன்றம்

விலை ரூபா: 4-00

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 12 ❋ இதழ் 6

ஆசிரியர்:

**பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா**

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

சுக்ல ஸூ புரட்டாதி மீ

( 17 - 9 - 89 )

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

புனிதம் பொருந்த மகம்புரிந்
    புந்தியிலார்க்கும் சோர்கச சுகம்
கனியும் கருணைக் கடைவிழியால்
    அருளிக் கமல மலர்போலும்
அணிதங் கூலர்மேல் அமர்திருவின்
    அருணேக் கிட்ட சித்திகளைப்
பணியு மெமக்கும் பரிசாகப்
    பரிவோ டுதவப் பரவுதுமே.

அனைத்தின் வடிவமாகவும், அனைத்தையும் ஆள்பவளாகவும், சக்தி(வல்லமை)யனைத்தும் பொருந்தியவளாயும் விளங்கும் துர்க்காதேவியே உலகில் சூழ்ந்திருக்கும் சகல பயங்களிலிருந்தும் எங்களையெல்லாம் காத்தருளும்வண்ணம் இக் கன்னிமாசத்தில் துர்க்கையன்னையைப் பிரார்த்திப்போமாக!

சிந்தனைக்கு நான்கு:-

* சுவைமிக்க பொருளைத் தனியனாய் இருந்து உண்ணுதலும் செய்யவேண்டியவற்றைத் தனிமையாக இருந்து ஆராய்தலும் தனியாக வழிநடத்தலும் பலருறங்கும்போது அவர்களுக்கிடையில் தனியனாக விழித்திருத்தலும் தவிர்க்கவேண்டியனவாகும்.

* செல்வத்தைவிரும்பும் மனிதன் துயில், மனத்தளர்ச்சி, அச்சம், சினம், காலந்தாழ்த்தல் ஆகிய இக்குற்றங்களை நீக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

* பிறர்க்கு எளிமை, நாணம், அருவருப்பு உண்டாக்கும் சொற்களையும் கருத்தற்ற (பிரயோசனமற்ற) மொழிகளையும் சிறிதும் கூறுதிருத்தல்நலம்.

* சுற்றத்தாருடன் பகைத்தலும், வலியவனுக்கு மானக்கேடு செய்தலும், பெண்கள், சிறுவர், வயோதிபர், அறிவிலார் இவர்களோடு சண்டை செய்தலும் ஏளனம் செய்தலும் தவிர்க்கவேண்டியனவாகும்.

## அன்னையருள்

தனம்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வறியா மனம்தரும், தெய்வ வடிவுந்தரும், நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும், நல்லன எல்லாம் தரும் அன்னே அபிராமியின் கடைக்கண்கள். சக்திஉபாசகரான அபிராமிப்பட்டர் சக்தியினருளை வியந்து தானே உணர்ந்து அருளிய அருட்கூற்று. சக்தியின் அளப்பரிய மூர்த்தங்களில் அதிஉன்னதமானதும் அருள்வடிவமானதும் அழகிய திரிபுரசுந்தரியின் வடிவமே. இவ்வடிவமே சக்தி விரதங்களில் முக்கியமான புரட்டாதிமாத நவராத்திரி காலங்களில் திரிசக்தியாக அதாவது துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி எனும் மூர்த்தங்களாக உலகில் அருளாட்சி செய்கின்றது. வீரமே உருவாக துர்க்கையாயும், தனந்தரும் செல்வநாயகியாய் லக்ஷ்மி தேவியாயும், கலைகளில் ஓங்கும் சக்தியாக சரஸ்வதி வடிவாயும் விளங்குகின்ற அன்னை பராசக்தியின் இந்நவராத்திரி காலங்களில் தேவியை எமக்கு வேண்டிய வீரம், செல்வம், கல்வி இம்மூன்றிற்குமாக வழிபட்டு இறுதி நாளாகிய விஜயதசமியிலன்று எவ்வெவற்றிலும் வெற்றியைப்பெறத் தேவியைப் பிரார்த்திப்பதே அன்னையருளாம்.

# சுக்ல வருஷ புரட்டாதி மாத கிரக நிரயன ஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5 30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனாம்சம் 23 பா 42கலை 56விகலை)

| தேதி செப். | புர | நாக்ஷத்ர நேர பகல் 12-00 ம நி. செ | சூரியன் ⊙ ரா பா க | சந்திரன் ☽ ரா பா க | செவ்வாய் ♂ ரா பா க | புதன் ☿ ரா பா க | குரு ♃ ரா பா க | சுக்கிரன் ♀ ரா பா க | சனி ♄ ரா பா க | ராகு ☊ ரா பா க | யுரேனஸ் ♅ ரா பா க | நெப்டி ♆ ரா பா க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | 11 44 41 | 5 0 22 | 11 21 37 | 5 4 36 | 5 15 24 | 2 14 25 | 6 11 30 | 8 13 37 | 10 0 21 | 8 7 39 | 8 15 54 |
| 18 | 2 | 11 48 38 | 1 21 | 0 6 41 | 5 15 | 14 46 | 14 32 | 12 40 | 13 37 | 0 18 | 7 39 | 15 54 |
| 19 | 3 | 11 52 34 | 2 19 | 0 21 33 | 5 53 | 14 2 | 14 39 | 13 49 | 13 38 | 0 15 | 7 39 | 15 54 |
| 20 | 4 | 11 56 31 | 3 18 | 1 6 8 | 6 32 | 13 12 | 14 46 | 14 59 | 13 39 | 0 11 | 7 40 | 15 54 |
| 21 | 5 | 12 00 27 | 4 16 | 1 20 19 | 7 11 | 12 16 | 14 53 | 16 8 | 13 40 | 0 8 | 7 40 | 15 54 |
| 22 | 6 | 12 4 24 | 5 15 | 2 4 7 | 7 50 | 11 16 | 15 0 | 17 17 | 13 41 | 0 5 | 7 41 | 15 54 |
| 23 | 7 | 12 8 21 | 6 14 | 2 17 31 | 8 29 | 10 13 | 15 7 | 18 26 | 13 42 | 10 0 2 | 7 42 | 15 54 |
| 24 | 8 | 12 12 17 | 7 13 | 3 0 33 | 9 8 | 9 8 | 15 13 | 19 35 | 13 43 | 9 29 58 | 7 42 | 15 54 |
| 25 | 9 | 12 16 14 | 8 11 | 3 13 17 | 9 47 | 8 2 | 15 19 | 20 44 | 13 44 | 29 55 | 7 43 | 15 54 |
| 26 | 10 | 12 20 10 | 9 10 | 3 25 46 | 10 25 | 6 57 | 15 26 | 21 53 | 13 46 | 29 52 | 7 44 | 15 54 |
| 27 | 11 | 12 24 7 | 10 9 | 4 8 3 | 11 4 | 5 56 | 15 32 | 23 2 | 13 47 | 29 49 | 7 45 | 15 54 |
| 28 | 12 | 12 28 3 | 11 8 | 4 20 10 | 11 43 | 4 58 | 15 37 | 24 11 | 13 49 | 29 46 | 7 45 | 15 54 |
| 29 | 13 | 12 32 0 | 12 7 | 5 2 11 | 12 23 | 4 7 | 15 43 | 25 19 | 13 50 | 29 42 | 7 46 | 15 55 |
| 30 | 14 | 12 35 56 | 5 13 6 | 5 14 6 | 5 13 2 | 5 3 23 | 2 15 49 | 6 26 28 | 8 13 52 | 9 29 39 | 8 7 47 | 8 15 55 |
| அக்டோபர் 1989 | | | | | | | | | | | | |
| 1 | 15 | 12 39 53 | 5 14 5 | 5 25 59 | 5 13 41 | 5 2 48 | 2 15 54 | 6 27 36 | 8 13 54 | 9 29 36 | 8 7 48 | 8 15 55 |
| 2 | 16 | 12 43 50 | 15 4 | 6 7 49 | 14 20 | 2 22 | 15 59 | 28 45 | 13 56 | 29 33 | 7 50 | 15 55 |
| 3 | 17 | 12 47 46 | 16 3 | 6 19 40 | 14 59 | 2 7 | 16 4 | 7 29 53 | 13 58 | 29 30 | 7 51 | 15 56 |
| 4 | 18 | 12 51 43 | 17 2 | 7 1 34 | 15 38 | 2 1 | 16 9 | 1 1 | 14 0 | 29 27 | 7 52 | 15 56 |
| 5 | 19 | 12 55 39 | 18 1 | 7 13 32 | 16 17 | 2 7 | 16 13 | 2 9 | 14 2 | 29 24 | 7 53 | 15 57 |
| 6 | 20 | 12 59 36 | 19 0 | 7 25 39 | 16 57 | 2 23 | 16 18 | 3 17 | 14 5 | 29 21 | 7 54 | 15 57 |
| 7 | 21 | 13 3 32 | 19 59 | 8 7 58 | 17 36 | 2 48 | 16 22 | 4 24 | 14 7 | 29 18 | 7 56 | 15 58 |
| 8 | 22 | 13 7 29 | 20 59 | 8 20 33 | 18 15 | 3 24 | 16 26 | 5 32 | 14 10 | 29 15 | 7 57 | 15 58 |
| 9 | 23 | 13 11 25 | 21 58 | 9 3 29 | 18 54 | 4 8 | 16 30 | 6 39 | 14 12 | 29 12 | 7 59 | 15 59 |
| 10 | 24 | 13 15 22 | 22 57 | 9 16 49 | 19 34 | 5 0 | 16 34 | 7 47 | 14 15 | 29 9 | 8 0 | 16 59 |
| 11 | 25 | 13 19 19 | 23 56 | 10 0 37 | 20 13 | 6 0 | 16 38 | 8 54 | 14 18 | 29 6 | 8 2 | 16 0 |
| 12 | 26 | 13 23 15 | 24 56 | 10 14 53 | 20 53 | 7 7 | 16 41 | 10 1 | 14 21 | 29 3 | 8 3 | 16 1 |
| 13 | 27 | 13 27 12 | 25 55 | 10 29 36 | 21 32 | 8 20 | 16 44 | 11 8 | 14 24 | 29 0 | 8 5 | 16 1 |
| 14 | 28 | 13 31 8 | 26 54 | 11 14 41 | 22 12 | 9 38 | 16 47 | 12 14 | 14 27 | 28 57 | 8 6 | 16 2 |
| 15 | 29 | 13 35 5 | 27 54 | 11 29 58 | 22 51 | 11 0 | 16 50 | 13 21 | 14 30 | 28 54 | 8 8 | 16 3 |
| 16 | 30 | 13 39 1 | 5 28 53 | 0 15 18 | 5 23 31 | 5 12 26 | 2 16 53 | 7 14 27 | 8 14 33 | 9 28 50 | 8 8 10 | 8 16 4 |

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமி செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (புரட்டாதி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதிவரை)

(சூரிய உதயம் 6 மணி 03 நிமிஷம்)

| வாரம் | 6...03<br>7...03 | 7...03<br>8...03 | 8...03<br>9...03 | 9...03<br>10...03 | 10...03<br>11...03 | 11...03<br>12...03 | 12...03<br>1...03 | 1...03<br>2...03 | 2...03<br>3...03 | 3...03<br>4...03 | 4...03<br>5...03 | 5...03<br>6...03 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# நாள் நலமா?

புரட் 1 ஞாயி (17-9-89) துவிதியை பகல் 10-11வ. ரேவதி மாலை 6-51 வரை, அமிர்தசித்தம்' சுபகருமங்கட்கு உகந்ததினம். ராகு 4-33—6-03

புரட் 2 திங் (18-9-89) திரிதியை காலை 6-39 வரை சதுர்த்தி பி.இ. 3-22 வரை, அசுவினி மாலை 4-12 வரை, சித்தம், அவசரகருமங்கள் செய்யலாம். ராகு 7-33—9-03

புரட் 3 செவ் (19 9-89) பஞ்சமி இரவு 12-28வரை பரணி பகல் 1-52 வரை, சித்தம், கார்த்திகை விரதம், சுபதினமன்று. ராகு 3 03—4-33

புரட் 4 புத (20-9-89) ஷஷ்டி இரவு 10-05 வரை, கார்த்திகை பகல் 11-59வரை, அமிர்தசித்தம், அசுபதினம் ராகு 12-03—1-33

புரட் 5 வியா (21-9-89) ஸப்தமி இரவு 8-19வரை, ரோகிணி பகல் 10-41 வரை, மரணம், சுபதினமன்று. ராகு 1-33—3 03

புரட் 6 வெள் (22-9 89) அஷ்டமி மாலை 7-13 வ. மிருகசீரிடம் பகல் 10-01 வரை, சித்தம், அசுபதினம். ராகு 10-33—12-03

புரட் 7 சனி (23-9-89) திருவாதிரை-சித்தம் பகல் 10 02 வரை, நவமி-மரணம் மாலை 6-48 வரை, சுபதினமன்று. ராகு 9-03—10-33

புரட் 8 ஞாயி (24-9-89) தசமி மாலை 7-02 வரை, புனர்பூசம் பகல் 10 42 வரை, சித்தம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 4 33—6 03

புரட் 9 திங் (25-9-89) ஏகாதசி மாலை 7-52வரை, பூசம்-மரணம் பகல் 11-58 வரை, ஸர்வஏகாதசி விரதம், அசுபதினம். ராகு 7-33—9-03

புரட் 10 செவ் (26-9-89) துவாதசி மாலை 9-12 வ. ஆயிலியம் பகல் 1-45வரை, சித்தம், சுபதினமல்ல. ராகு 3-02—4 32

புரட் 11 புத (27 9 89) திரயோதசி இரவு 10-57 வரை, மகம் பகல் 3 56 வரை, சித்தாமிர்தம், பிரதோஷவிரதம் அவசரகருமங்கள் செய்யலாம். ராகு 12-02—1-32

புரட் 12 வியா (28-9-89) சதுர்த்தசி பி.இ. 1-00வ. பூரம்-சித்தம் மாலை 6-28 வரை, அசுபதினம். ராகு 1 32—3-02

புரட் 13 வெ (29-9-89) அமாவாசை பி.இ. 3-18வ. உத்தரம் இரவு 9 14 வரை, சித்தாமிர்தம், மஹாளய அமாவாசை விரதம் சுபதினமன்று. ராகு 10-32—1-02

புரட் 14 சனி (30-9-89) பிரதமை பி.இ. 5 44வ. அத்தம் இரவு 12-09வரை, மரணம், நவராத்திரி ஆரம்பம் அசுபதினம். ராகு 9-02—10-32

புரட் 15 ஞாயி (1-10-89) துவிதியை முழுவதும், சித்திரை பி.இ. 3-10 வரை, சித்தம், சந்திர தரிசனம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 4-32—6 02

புரட் 16 திங் (2-10 89) துவிதியை காலை 8-15 வ. சுவாதி முழுவதும், அமிர்தம், கரிநாள், நற்கருமங்கள் செய்யலாம். ராகு 7-32—9 01

புரட் 17 செவ் (3-10-89) திரிதியை பகல் 10-45வ. சுவாதி—சித்தம் காலை 6-10 வரை, சதுர்த்திவிரதம் சுபகருமங்களை விலக்குக. ராகு 3-02—4 31

புரட் 18 புத (4-10-89) சதுர்த்தி பகல் 1-07 வரை, விசாகம் காலை 9-04 வரை, சித்தாமிர்தம், நற்கருமங்களை தவிர்க்க. ராகு 12-02—1-31

புரட் 19 வியா (5-10-89) பஞ்சமி பகல் 3-13 வரை, அனுஷம்-சித்தம் பகல் 11-44 வரை, ஷஷ்டி விரதம் சுபகருமங்கட்கு உகந்தது. ராகு 1-32—3-01

புரட் 20 வெள் (6-10-89) ஷஷ்டி மாலை 4-55வரை. கேட்டை-மரணம் பகல் 2-02 வரை, அசுபதினம். ராகு 10-32—12-01

புரட் 21 சனி (7-10-89) மூலம்-சித்தம் பகல் 3-49 வரை, ஸப்தமி-மரணம் மாலை 6-04 வரை, சுபதினமல்ல. ராகு 9-02—10-31

புரட் 22 ஞாயி (8-10-89) அஷ்டமி மாலை 6-32வ. பூராடம் மாலை 4-57 வரை, சித்தாமிர்தம், அசுபதினம். ராகு 4-32—6-01

புரட் 23 திங் (9 10 89) நவமி மாலை 6-13 வரை, உத்தராடம்-மரணம் மாலை 5-20 வரை, மஹாநவமி சுபகருமங்களை விலக்குக. ராகு 7-32—9-01

புரட் 24 செவ் (10-10-89) திருவோணம்-சித்தம் மாலை 4-56 வரை, தசமி-மரணம் மாலை 5-07வ. விஜயதசமி அசுபதினம். ராகு 3-02—4-31

புரட் 25 புத (11-10-89) ஏகாதசி பகல் 3-14வரை, அவிட்டம்—மரணம் பகல் 3-46 வரை, அசுபதினம். ராகு 12 02—1-31

புரட் 26 வியா (12-10-89) துவாதசி பகல் 12-39வ. சதயம்—மரணம் பகல் 1-55 வரை, பிரதோஷவிரதம் அசுபதினம். ராகு 1-32—3 01

புரட் 27 வெள் (13-10-89) திரயோதசி காலை 9-29 வரை, சதுர்த்தசி பி.இ. 5-54 வரை, பூரட்டாதி பகல் 11-29 வரை, சித்தம், அசுபதினம், ராகு 10-32—12-01

புரட் 28 சனி (14-10-89) பூரணை பி.இ. 2-01வரை, உத்தரட்டாதி-சித்தம் காலை 8-38 வரை, ரேவதி —மரணம் பி.இ 5-32 வரை, பூரணை விரதம், அசுப தினம். ராகு 9-02—10-31

புரட் 29 ஞாயி (15-10-89) பிரதமை இரவு 10-07 வரை, அசுவினி-சித்தம் பி.இ. 2-25 வரை, கரி நாள், சுபகருமங்கட்கு நன்று. ராகு 4-32—6-01

புரட் 30 திங் (16-10-89) துவிதியை மாலை 6—18வ. பரணி—சித்தம் இரவு 11-27 வரை, அசுபதினம். ராகு 7-32—9-01

## சனி விரதம்

ஆயுள்காரகனாக விளங்கும் சனிபகவானுக்கு உரியதினம் சனிவாரங்களாகும். அதிலும் புரட்டாதிமாத(கன்னிமாத)த்தில் வரும் சனிக்கிழமைகள் சனிபகவானாலுண்டாகும் தோஷங்களை நீக்குவதற்குரியனவாகும். முக்கிய சனி தோஷமுற்றவர்கள், விரதமிருப்பதுடன் எள்கலந்த உணவை உண்ணுதலும், எள்தானம் செய்தல், இரும்பு லோகம் தானம் கொடுத்தல், காகங்களுக்கு வெல்லம் கலந்த எள்ளை உணவாகக் கொடுத்தலும் தோஷநீக்கத்திற்குரிய நற்செயல்களாகும். சனி வாரங்களில் சனிபகவானுக்கு எள்ளுப்பொட்டளி கட்டி நல்லெண்ணையில் விளக்கேற்றுதல் சனி தோஷபாபநீக்கச் செயலாகும். மேலும் சனி வாரங்களில் கருடதர்சனமும், ஆஞ்சநேயர் (அனுமார்) தர்சனமும் சிறந்ததாகும்.

# துலா லக்கின ஆணும் கன்னி லக்கின பெண்ணும் சேர்வது தீமையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

துலாலக்கின ஆண் மற்றவர்களை மருட்டக் கூடியவர், சமூகவியலாளி; காதலுடையவர். இக்குணாதிசயங்களை வெளிப்படையில்லாமல் இரகசியமாகக்கொண்டவள். கன்னிலக்கினகாரி. அவளை மிகவும் மெச்சிப் பாராட்டி அவளைத் தூக்கிவிடுவான். இந்த வருடத்தில் இப்படித் தூக்கிவிட்டது இதுதான் இருபதாவது தடவை என்பதை அவள் உணரமாட்டாள். தனது பொய்த்தோற்றங்களை மறைத்துவைக்கப்பாரிப்பாள். ஆனால் இறுதியில் உண்மைகள் வெளியாகிவிடும். துலாக்காரன் மேலோட்டமாகப் பார்ப்பார். இந்த இடத்தில் தான் அவர்களின் உறவு ஒரு திருப்பு முனையைக் காணும். அவனுடைய குணாதிசயத்துக்காக அவனை ஏற்கவேண்டும். அல்லது கசப்பாகி பொய்த்தோற்றத்தை ஏற்கவேண்டும். அவரது குணாதிசயங்களை அலசி ஆராய்ந்தாளானால் அது துலாக்காரனை கோபப்படுத்தும். அதன் விளைவாக அவனை அவள் இழக்க நேரிடும். அவன் தொடர்ந்து அவளுடன் சண்டையிடில் அவளிடமிருந்து கருணையை எதிர்பார்க்கமுடியாது. அவன் தன்னுடைய உணர்ச்சிகளால் ஆளப்படுகிறான். அவள் தன்னுடைய விவேகத்தால் ஆளப்படுகிறாள். அவளுடன் விவாதிக்க அவன் மறுத்தால் அவள் விரக்திப்படுவாள். நீசின்னத்தனமுடையனி ஆதலால் உன்னுடன் பேசமுடியாதென்பான். இருவரும் ஒத்துப்போகத் தன்மை உண்டாயின் அவன் உண்மைநிலையை நிலைநாட்டவேண்டும். அவள் நச்சரிக்கக்கூடாது.

தன்னுடைய பாலியலில் துலாக்காரனுக்கு பல பக்கங்களுண்டு. அவன் துணிகளை ஸ்திரிக்கை போடும்போது அவன் காதல்பண்ணுவான். அடுத்தபடியாக இரண்டு மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக காதல்லீலை செய்வான். ஒளிப்பு மறைப்பின்றி நேரடியாக நடப்பவள். இவையெல்லாம் அனுவசியம் என்று நினைப்பாள். அவள் இதை அவனுக்குச் சொல்லப்போனால் அவன் விவாதிக்காமல் தன்னை ஏற்கக்கூடிய இன்னுமொரு சோடியைத் தேடுவான்.

இருபகுதியாருக்கும் சந்தோஷத்தை இல்லாமல் பண்ணும் ஒரு உறவாகும்.

## திசையா? தசையா?

பொதுவாக அனேகர் ஒவ்வொரு கிரகதசை நடைபெறும்போதும் திசை, திசை என்றே குறிப்பிடுகின்றனர். சில நூல்களிலும் இவ்வாறே இடம்பெறுகிறது. இது தவறானது. தசை என்பதே சரியானது. வேண்டுமானால் தெசை என்று சொல்லலாம். அதில் தவறில்லை. திசை என்பது திக்கு என்றே பொருள்படும்.

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

சுக்ல ஸூ புரட்டாதி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (17-9-89 முதல் 16-10-89 வரை)


| இங் செப் | தமி புர | வாரம் | கன்னி ம.மி. முதல் (காலை) | கன்னி ம.மி. வரை | துலா ம. மி. வரை (காலை) | விருச்சி ம. மி. வரை (பகல்) | தனுசு ம. மி. வரை (பகல்) | மகரம் ம. மி. வரை (பி.ப) | கும்பம் மி. ம. வரை (மாலை) | மீனம் ம. மி. வரை (இரவு) | மேடம் ம. மி. வரை (இரவு) | இடபம் ம. மி. வரை (இரவு) | மிதுனம் ம. மி. வரை (பி.இ) | கடகம் ம. மி. வரை (பி.இ) | சிங்கம் ம. மி. வரை) (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | ஞாயி | 6 0 | 8 0 | 10 4 | 12 14 | 2 22 | 4 18 | 6 3 | 7 46 | 9 35 | 11 45 | 1 49 | 3 56 | 5 57 |
| 18 | 2 | திங் | 5 57 | 7 56 | 10 0 | 12 10 | 2 18 | 4 14 | 5 59 | 7 42 | 9 31 | 11 41 | 1 45 | 3 52 | 5 53 |
| 19 | 3 | செவ் | 5 53 | 7 52 | 9 56 | 12 6 | 2 14 | 4 10 | 5 55 | 7 38 | 9 27 | 11 37 | 1 41 | 3 48 | 5 49 |
| 20 | 4 | புதன் | 5 49 | 7 49 | 9 52 | 12 2 | 2 10 | 4 6 | 5 51 | 7 34 | 9 23 | 11 33 | 1 37 | 3 44 | 5 45 |
| 21 | 5 | வியா | 5 45 | 7 44 | 9 48 | 11 58 | 2 6 | 4 2 | 5 47 | 7 30 | 9 19 | 11 29 | 1 33 | 3 40 | 5 41 |
| 22 | 6 | வெள் | 5 41 | 7 40 | 9 44 | 11 54 | 2 2 | 3 58 | 5 43 | 7 26 | 9 15 | 11 25 | 1 29 | 3 36 | 5 37 |
| 23 | 7 | சனி | 5 37 | 7 37 | 9 41 | 11 50 | 1 59 | 3 55 | 5 40 | 7 23 | 9 12 | 11 22 | 1 26 | 3 33 | 5 34 |
| 24 | 8 | ஞாயி | 5 34 | 7 33 | 9 37 | 11 47 | 1 55 | 3 51 | 5 36 | 7 19 | 9 8 | 11 18 | 1 22 | 3 29 | 5 30 |
| 25 | 9 | திங் | 5 30 | 7 29 | 9 33 | 11 43 | 1 51 | 3 47 | 5 32 | 7 15 | 9 4 | 11 14 | 1 18 | 3 25 | 5 26 |
| 26 | 10 | செவ் | 5 26 | 7 24 | 9 28 | 11 38 | 1 46 | 3 42 | 5 27 | 7 10 | 8 59 | 11 9 | 1 13 | 3 20 | 5 21 |
| 27 | 11 | புதன் | 5 18 | 7 20 | 9 24 | 11 34 | 1 42 | 3 38 | 5 23 | 7 6 | 8 55 | 11 5 | 1 9 | 3 16 | 5 17 |
| 28 | 12 | வியா | 5 17 | 7 16 | 9 20 | 11 30 | 1 38 | 3 34 | 5 19 | 7 2 | 8 51 | 11 1 | 1 5 | 3 12 | 5 13 |
| 29 | 13 | வெள் | 5 13 | 7 12 | 9 16 | 11 26 | 1 34 | 3 30 | 5 15 | 6 58 | 8 47 | 10 57 | 1 1 | 3 8 | 5 9 |
| 30 | 14 | சனி | 5 9 | 7 7 | 9 12 | 11 22 | 1 30 | 3 26 | 5 11 | 6 54 | 8 43 | 10 53 | 12 57 | 3 4 | 5 5 |
| 1 | 15 | ஞாயி | 5 5 | 7 4 | 9 8 | 11 18 | 1 26 | 3 22 | 5 7 | 6 50 | 8 39 | 10 49 | 12 53 | 3 0 | 5 1 |
| 2 | 16 | திங் | 5 1 | 7 0 | 9 4 | 11 14 | 1 22 | 3 18 | 5 3 | 6 46 | 8 35 | 10 45 | 12 49 | 2 56 | 4 57 |
| 3 | 17 | செவ் | 4 57 | 6 56 | 9 0 | 11 10 | 1 18 | 3 14 | 4 59 | 6 45 | 8 31 | 10 41 | 12 45 | 2 52 | 4 53 |
| 4 | 18 | புதன் | 4 53 | 6 52 | 8 56 | 11 6 | 1 14 | 3 10 | 4 55 | 6 38 | 8 27 | 10 37 | 12 41 | 2 48 | 4 49 |
| 5 | 19 | வியா | 4 49 | 6 48 | 8 52 | 11 2 | 1 10 | 3 6 | 4 51 | 6 34 | 8 23 | 10 33 | 12 37 | 2 44 | 4 45 |
| 6 | 20 | வெள் | 4 45 | 6 44 | 8 48 | 10 58 | 1 6 | 3 2 | 4 47 | 6 30 | 8 19 | 10 29 | 12 33 | 2 40 | 4 41 |
| 7 | 21 | சனி | 4 41 | 6 40 | 8 44 | 10 54 | 1 2 | 2 58 | 4 43 | 6 26 | 8 15 | 10 25 | 12 29 | 2 36 | 4 37 |
| 8 | 22 | ஞாயி | 4 37 | 6 36 | 8 40 | 10 50 | 12 58 | 2 54 | 4 39 | 6 22 | 8 11 | 10 21 | 12 25 | 2 32 | 4 33 |
| 9 | 23 | திங் | 4 33 | 6 32 | 8 36 | 10 46 | 12 54 | 2 50 | 4 35 | 6 18 | 8 7 | 10 17 | 12 21 | 2 28 | 4 29 |
| 10 | 24 | செவ் | 4 29 | 6 28 | 8 32 | 10 42 | 12 50 | 2 46 | 4 31 | 6 14 | 8 3 | 10 13 | 12 17 | 2 24 | 4 25 |
| 11 | 25 | புதன் | 4 25 | 6 24 | 8 28 | 10 38 | 12 46 | 2 42 | 4 27 | 6 10 | 7 59 | 10 9 | 12 13 | 2 20 | 4 21 |
| 12 | 26 | வியா | 4 21 | 6 20 | 8 24 | 10 34 | 12 42 | 2 38 | 4 23 | 6 6 | 7 55 | 10 5 | 12 9 | 2 16 | 4 17 |
| 13 | 27 | வெள் | 4 17 | 6 16 | 8 20 | 10 30 | 12 38 | 2 34 | 4 19 | 6 2 | 7 51 | 10 1 | 12 5 | 2 12 | 4 13 |
| 14 | 28 | சனி | 4 13 | 6 12 | 8 16 | 10 26 | 12 34 | 2 30 | 4 15 | 5 58 | 7 47 | 9 57 | 12 1 | 2 8 | 4 9 |
| 15 | 29 | ஞாயி | 4 9 | 6 8 | 8 12 | 10 22 | 12 30 | 2 26 | 4 11 | 5 54 | 7 43 | 9 53 | 11 57 | 2 4 | 4 5 |
| 16 | 30 | திங் | 4 5 | 6 4 | 8 8 | 10 18 | 12 26 | 2 22 | 4 7 | 5 50 | 7 39 | 9 49 | 11 53 | 2 0 | 4 1 |

ஒக்டோபர் 1989

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குறிப்பிட்ட ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: புரட் 30உ (16-10-89) மாலை 5-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (4-07—5-50) மீனலக்னம்

# புரட்டாதி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

7உ (23-9-89) இரவு 11-16க்கு மக-ரர்கு
7உ (23-9-89) இரவு 11-16க்கு மக-கேது
17உ (3-10-89) காலை 8-0[illegible]க்கு விரு-சுக்
3உ புதன் அஸ்தமனம்
15உ புதன் உதயம்
19உ புதன் வக்ரத்தியாகம்
7உ நெப்டியூன் வக்ரத்தியாகம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புரட். | 1உ | (17-9-89) | மாலை | 6-50 | முதல் | மேடம் |
| | 3உ | (19-9-89) | இரவு | 7-21 | ,, | இடபம் |
| | 5உ | (21-9-89) | இரவு | 11-16 | ,, | மிதுனம் |
| | 7உ | (23-9-89) | பி.இ. | 4-28 | ,, | கடகம் |
| | 10உ | (26-9-89) | பகல் | 1-44 | ,, | சிங்கம் |
| | 12உ | (28-9-89) | பி.இ. | 1-08 | ,, | கன்னி |
| | 15உ | (1-10-89) | பகல் | 1-39 | ,, | துலாம் |
| | 17உ | (3-10-89) | பி.இ. | 2-21 | ,, | விருச்சிகம் |
| | 20உ | (6-10-89) | பகல் | 2-02 | ,, | தனுசு |
| | 22உ | (8-10-89) | இரவு | 11-07 | ,, | மகரம் |
| | 24உ | (10-10-89) | பி.இ. | 4-27 | ,, | கும்பம் |
| | 27உ | (13-10-89) | காலை | 6-08 | ,, | மீனம் |
| | 29உ | (15-10-89) | காலை | 5-33 | ,, | மேடம் |
| | 30உ | (16 10-89) | பி.இ. | 4 45 | ,, | இடபம் |

### கிரகநிலை குறிக்க:-

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி புரட். மீ 30உ மாலை 5-00 மணிக்கு மீன லக்னம் என அறிந்து கொண்ட பின் 'மீனம்' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது மேடலக்னம் உதயமாகின்றது. லக்கின நிபதி செவ்வாய் 6-ல் இருந்து லக்கினத்தைத் திருஷ்டிப்பதால் ஸ்திரமான முடிவுகள் எடுக்கப்படும். சனி, செவ்வாய் ஒன்றை யொன்று தாக்குவதால் திடீர்முடிவுகளும், அசம்பாவிதங்களும் அதிகமாக இருக்கும். வன்செயல்களைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும்.

# புரட்டாதி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

17-9-89 — 16-10-89

சூரியன்:- 16-9-89 இரவு 8-20
கன்னிராசிப் பிரவேசம்
17-9-39 உதயம் காலை 6-03
17-9-89 உச்சம் பகல் 12-05
17-9-89 அஸ்தமனம் மாலை 6-07
1-10-89 உதயம் காலை 6-02
1-10-89 உச்சம் பகல் 12-00
1-10-89 அஸ்தமனம் மாலை 5-57

சந்திரன்:- 29-9-89 அமாவாசை பி.இ. 3-18
1-10-89 சந்திரதரிசனம்
14-10-89 பூரணை பி.இ. 2-01

### கிரகங்கள்

புதன்:- மாத ஆரம்பத்தில் வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் 19-9-89 இல் மேற்கில் அஸ்தமனமடையும். பின் 1-10-89இல் கிழக்கில் உதயமாகும். 5-10-89ல் வக்கிரகதியினின்றும் நீங்கி நேர்கதியிற் செல்லும். மாதமுடிவில் சூரிய உதயத்தின் பின் கிழக்குவானில் 16 பாகை உயரத்தில் காணப்படும். இம்மாதம் முழுவதும் கன்னிராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

சுக்கிரன்:- மாதத் தொடக்கத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 41பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 45 பாகை உயரத்தில் காணப்படும். 3-10-89ல் விருச்சிகராசியிற் பிரவேசிக்கின்றது.

செவ்வாய்:- மாதம் முழுவதும் கன்னிராசியில் அஸ்தமனத்தில் சஞ்சரிக்கின்றது.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூரியஉதயம் முன் 75பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு மேற்கே 12பாகை சரிந்து காணப்படும். இம்மாதமும் மிதுனராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

சனி:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் கிழக்கு வானில் 76பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு மேற்கே 15பாகை சரிந்து காணப்படும்; தனுராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

யுரேனஸ்:- இம்மாதம் தனு ராசியிற் சஞ்சரிக்கின்றது.

நெப்டியூன்:- வக்கிரகதியில் தனு ராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 23-9-89இல் வக்கிரகதி நீங்கி நேர்கதியிற் செல்லத் தொடங்கும்.

புளூட்டோ:- இம்மாதம் துலாராசியிற் சஞ்சரிக்கின்றது.

### சமாகமங்கள்

23-9-89 பி.இரவு சந்திரனுக்கு தெற்கு குரு 4 பாகை.

27-9-89 பி.இரவு சந்திரனுக்கு வடபுறம் ஒட்டினாற்போல மகநட்சத்திரம் காணப்படும்.

4-10-89 பி.இரவு சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 3பாகை. முன்னிரவில் அவதானிக்க.

5-10-89 முற்பகல் சந்திரனால் கேட்டை நட்சத்திரம் மறைக்கப்படும். அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.


7-10-89 மாலை சந்திரனுக்கு வடக்கு சனி 4 பாகை.


## தேவை

ஜாதககணிதம், செய்யவும் பலன்கள் எழுதவும் ஜாதகவிஷயம்தெரிந்த உதவியாளர் தேவை. கணித, தமிழ், ஆங்கில அறிவும் அழகாக எழுதும் திறமையும் வேண்டும். சாவகச்சேரி நகரப் பகுதிக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது விண்ணப்பிக்கவும்.

முகவரி:-

திருக்கணித நிலையம்
கோட்டடி
கண்டி வீதி — சாவகச்சேரி.




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

## 17-9-89 முதல் 16-10-89 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதைமனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 6ல் லோகமூர்த்தி, குருபகவான் 3ல் தாம்ரமூர்த்தி சனிபகவான் 9ல் தாம்ரமூர்த்தி, செவ்வாய் 6ல் ரஜஸமூர்த்தி, புதன் 6ல் லோகமூர்த்தி சுக்கிரன் 7ல் லோகமூர்த்தி, ராகு 10ல் தாம்ரமூர்த்தி, கேது 4ல் தாம்ரமூர்த்தியாக வலம் வருகின்றார்கள். பெரும்பாலானவர்கள் மூர்த்திபலம் குன்றுவது இவர்களின் துரதிஷ்டமே! சூரியன், செவ்வாய், புதன், ராகு கோசாரசஞ்சார பலம் பெறுவது நன்மையாகும். பொதுவாக இந்த ராசிக்காரருக்கு இந்தமாதம் நன்மைதீமை கலந்த பலன்களே நிகழும். இவர்கள் தெய்வபக்தி நவநாயகர் வழிபாடுகள் செய்து வருவதால் எதனையும் சமாளித்து அமைதியும் ஆறுதலும் பெற முடியும்.

குடும்பத்தவர்களுக்கு வீட்டில் பலப்பல பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றி மறையும். புத்திரர் வழியில் விரையங்களும் இனசன பந்துக்கள் பகை விரோதங்களும் ஏற்படும். குடும்ப வருமானமும் குன்றும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் மந்தநிலையடையும். நிதிநெருக்கடிகளும், சில சமயங்களில் சோரசத்துருபயமும் ஏற்படக்கூடும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் அடிக்கடி ஏற்படும். எனினும் சூரியன் தானசஞ்சாரபெலம் பெறுவதால் சந்தர்ப்பங்களுக்கேற்ப எதனையும் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

விவசாயிகளுக்கு இயற்கை - செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவுகள் தொடர்ந்தாலும் முயற்சிக்கேற்ப விளைச்சலும் பெறுவர். சந்தைப் படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படும்.

தொழிலாளர்களுக்குள் வேலைநிறுத்தம் முதலான தொழில் பிணக்குகளால் தொழில் குழப்பங்கள் ஏற்படும். வேலையில்லாத்திண்டாட்டமும் ஏற்படும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் ஏற்படும்,

மாணவர் கல்வி முன்னேற்றத்துக்குத் தடைக்காரணிகளே வலுவடையும். மாணவர் மத்தியில் ஏமாற்றமும் மனக்குழப்பங்களும் ஏற்படுதலால் கல்வி முன்னேற்றம் குறைவுறும்.

பெண்களுக்கு இந்தமாதத்தில் மனநிறைவு கிடைப்பது கடினம். காதல் விவாகமுயற்சிகளில் முன் எச்சரிக்கை தேவை. நிதானமும் பொறுயும் உடையவர்கள் நன்மை பெறுவர்.

அதிஷ்டநாட்கள்:- செப்.18,22,23,27,28
அக்.6பி.ப,7,8,12,13காலை,16

துரதிஷ்டநாட்கள்:- செப்.17பக,29,30
அக்.1மு.ப,4,5,13பக,14




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசிரிடம் 1,2ம் கால்

இடபராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியன் 5ல் சுவர்ணமூர்த்தி, குரு 2ல் ரஜஸமூர்த்தி, சனி 8ல் (அட்டமத்தில்) சுவர்ணமூர்த்தி, செவ்வாய் 5ல் லோகமூர்த்தி, புதன் 5ல் சுவர்ணமூர்த்தி, சுக்கிரன் 6ல் தாம்ரமூர்த்தி, 3-10-89 முதல் 7ல் சுவர்ணமூர்த்தி இராகு 9ல் ரஜஸமூர்த்தி, கேது 3ல் ரஜஸமூர்த்தியாக வலம் வருகின்றார்கள். செவ்வாய் - சுக்கிரன் தவிர்ந்த எல்லாக் கிரகங்களும் மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு இந்தமாதமும் சுபபலன்களே அதிகம் நிகழும். இராசாங்க உதவிகள், பெரியோர் உதவிகள், தனக்கு அல்லது குடும்பத்தில் மனநிறைவான சம்பவங்கள் நிகழக் சாதகமான காலம். கோசாரசஞ்சாரத்தில் குரு, கேது தவிர மற்றக்கிரகங்கள் பலம் குன்றுவதால் பொருள் நட்டம், குடும்பகிலேசம், காரியத்தடை ஏமாற்றம் முதலான பலன்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் சந்தோஷ கொண்டாட்டங்கள் நிகழக்கூடும். கணவன் மனைவி நல்லுறவும் வளரும். குடும்ப வருமானமும் அதிகரிக்கும். புத்திரர் உறவினர் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் இந்தமாதமும் வியாபார முன்னேற்றம் தொடரும். உணவுப்பொருள்கள் தானியவகைகள் வியாபாரம் செய்வோருக்கு அதிகலாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்திபலம் பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் வேலைப்பொறுப்புக்களும் கூடும். பதவி உயர்வு சிலருக்கு கிட்டும்.

விவசாயிகளுக்கு சனி அட்டமத்தில் சஞ்சாரம் செய்தாலும் மூர்த்திபலமும் குருவின் திருஷ்டியும் பெறுவதால் இந்தமாதமும் விளைச்சல் கூடும், நல்ல சந்தை வாய்ப்பும் பெறுவர்.

தொழிலாளர்களுக்கு சனி மூர்த்திபலம் பெறுவதும் இவரைக் குரு திருஷ்டிப்பதும் வேலைவசதிகளையும் வருவாய் அதிகரிப்பையும் கொடுக்க ஏதுவாகும். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் உண்டு.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். வங்கித்துறை, சட்டத்துறை மாணவர் சிறப்புச் சித்திகள் பெறுவர். மாணவர் மத்தியில் புரிந்துணர்வும் சுயமுயற்சியும் ஏற்படும்.

பெண்களுக்கு வாக்கு-குடும்பத்தானத்தில் குரு பலம் பெறுவதால் மனநிறைவான காரியங்களில் வெற்றி கிட்டும். விவாகாதி முயற்சிகளிலும் காரியசித்தி கிட்டும்.

அதிஷ்டநாட்கள்:- செப்.17பக,20,21,25,29,30
அக்.1மு.ப,9,10,11கா,14

துரதிஷ்டநாட்கள்;- செப்.17இர,18,19பக
அக்.1பி,ப,2,3,7,8,15ப,16.




மிருகசிரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

இவர்களுக்கு இந்தமாதம் சூரியன் 4ல் தாம்பரமூர்த்தி, குரு சென்மத்தில் சுவர்ணமூர்த்தி சனி 7ல் ரஜஸமூர்த்தி. செவ்வாய் 4ல் தாம்பரமூர்த்தி, புதன் 4ல் தாம்பரமூர்த்தி, சுக்கிரன் 3-10-89 வரை 5ல் சுவர்ணமூர்த்தியாகவும் பின் 6ல் ரஜஸமூர்த்தியாகவும், இராகு 8ல் கேது 2ல் சுவர்ணமூர்த்தியாகவும் சஞ்சாரம் செய்கின்றனர். பெரும்பாலான கிரகங்கள மூர்த்திபலம பெற்றாலும் பொதுவாக எல்லாக்கிரகங்களும் கோசார

சஞ்சாரபலம் குறைவதால் நன்மைதீமை கலந்த பலன்களே நிகழும். தேகநலம், குடும்பநலம் குன்றும். பொருள் வருமானமும் குறையும்.

குடும்பத்தில் வீண் செலவுகள், கணவன் மனைவி சச்சரவுகள், பிரிவினைகள் நிகழக்கூடும். குடும்பவருமானம் வீழ்ச்சியுறும். புத்திரர் உறவினர் பகைவிரோதங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தடைப்படும். நிதிநெருக்கடிகளும் ஏற்படும். சிலருக்குச் சோர, சத்துரு, கருவி, அக்கினி, ஆயுத பயங்கள் ஏற்படலாம். முதலீடுகளைத் தவிர்க்கவும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும். மேலதிகாரிகளின் துன்புறுத்தல்களால் மன விரக்தி, பதவிநீக்கம், பதவி இறக்கம், கஷ்டப் பிரதேச இடமாற்றம் முதலியன நிகழலாம்.

விவசாயிகளுக்கு இந்தமாதம் பயிர் உற்பத்திச் செலவுகள் கூடும். விளைச்சலும் குறைவுறும். விவசாயப்பண்ணைகளிலும் லாபம் பெறுவது கடினம். வீண்விரையங்கள் ஏற்படும்.


தொழிலாளர் வேலையில்லாப் பிரச்சனைகள் கூடிக்கொண்டே போகும். தொழில் பிணக்குகளும் ஏற்படும். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவது கடினம். கடன் பயமும் ஏற்படும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெரும்பாலும் தடைப்படும். சிலர் கல்வி கற்றலைத் தொடராது இடைநிறுத்தினாலும் ஆச்சரியமில்லை. மாணவர் மத்தியில் விரக்தியும் ஏமாற்றங்களுமேற்படலாம்.

பெண்களுக்கு வாக்குவிரோத சம்பவங்கள் அடிக்கடி ஏற்படும். எதிலும் இவர்களுக்கு மனக்குழப்பமே ஏற்படும். விவாகாதி முயற்சிகள் பெரும்பாலும் தோல்விகள் ஏமாற்றங்களைத்தரும்.

அதிஷ்டநாட்கள்:- செப்.18,22,23,27,28
அக்.2,3,11பக,12,15பக,16

துரதிஷ்டநாட்கள்:- செப்.19இர.20,21
அக்.4 5,9,10,11கா.



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம் கடகராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 3ல் ரஜஸமூர்த்தி, குரு 12ல் லோகமூர்த்தி, சனி 6ல் லோகமூர்த்தி, செவ்வாய் 3ல் சுவர்ணமூர்த்தி, புதன் 3ல்ரஜஸமூர்த்தி, சுக்கிரன் 3-10-89 வரை 4ல் ரஜஸமூர்த்தி, பின் 5ல் லோகமூர்த்தி இராகு 7ல் கேது சென்மத்தில் லோகமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றனர். தேகசுகம், குடும்ப சுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானத்துக்குச் செலவுகளும் ஏற்படும். இராசாங்க உதவிகளும் கிடைக்கும், வீண் அலைச்சல், நீசர் தொல்லை முதலியனவும் இடைக்கிடை ஏற்படக்கூடும். புத்திரர் இனசனபந்துக்கள் துன்பங்களும் ஏற்படலாம்.

குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடிக்கொண்டே போகும். வீட்டில் பெரும்பாலும் பூசல்களும் பிணக்குகளும் அடிக்கடி இடம்பெறும். கடன்பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்குப் புதன் மூர்த்திபலம் பெறுவதால் வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும், ஆனால் நிதிநெருக்கடிகளும நிலுவைக்கடன்களும் லாபத்தைக் குறையச் செய்யும். முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் புதுப்புதுப் பொறுப்புக்களையும், பதவி மாற்றங்களையும் பெறுவர்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவுகள் கூடி விளைச்சலும் கூடுவதால் லாபம் பெறுவர். நல்ல சந்தைவாய்ப்பையும் பெற முடியும்.

தொழிலாளர்களுக்குள் கருத்து வேறுபாடுகளும், தொழில் பிணக்குகளும் அடிக்கடி இடம்பெறும். எனினும் வேலைவாய்ப்புக்களும் ஓரளவு பெறுவர். எதிர்பார்த்த லாபம் கிடையாது.

மாணவர் கல்வித்தடைக் காரணிகள் தொடரும். ஆனால் மாணவர்கள் சுயமுயற்சி பெறுவர். முக்கியமாக புதன் சுக்கிரர்கள் மூர்த்திபலம் பெறுவதால் கணிதத்துறை. கலைத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்தி பெறுவர்,

பெண்களுக்கு விவாகாதி முயற்சிகள் வெற்றி பெறுவது கடினம். குடும்பப் பெண்களுக்குப் பொருளாதாரக் கஷ்டங்கள் ஏற்படலாம். உத்தியோகப் பெண்கள் அதிகாரிகளால் மெச்சப்படுவர்.

அதிஷ்டநாட்கள்:- செப்.17பக,20,21,25,29,30
அக்.1மு,ப,4,5,13பக,14

துரதிஷ்டநாட்கள்:- செப்.22,23,24அ.கா
அக.7,8,11பக,12.



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 2-ம் கால்

சிங்க ராசியில் ஜனன மானவர்களுக்கு இந்த மாதம் சூரியன் 2ல் லோகமூர்த்தி, குரு 11ல் சுவர்ணமூர்த்தி, சனி 5ல் தாம்ர மூர்த்தி, செவ்வாய் 2ல் ரஜஸமூர்த்தி, புதன் 2ல் லோகமூர்த்தி, சுக்கிரன் 3ல் லோகமூர்த்தி, இராகு 6ல், கேது 12ல் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றனர். கிரக நாயகரான சூரிய பகவான் பலங்குன்றுவது நன்மைதராது. ஆனல் குரு பகவான் இலாபத்தில் மூர்த்திபெலம் பெறுவது நன்மையாகும். இவர்களின் தேகநலம் இடையிடையே பாதிப்படையும். குடும்பநலம் சீராக இருக்கும். சாதாரணமாகப் பொருள் வருமானமும், இராசாங்க விரோதம், வீண்விரயம் பந்துமித்திரர் துன்பம், அலைச்சல், ஏமாற்றம் முதலிய பலன்கள் பெரும்பாலும் நிகழும். ஆயினும் சுப நிகழ்ச்சிகளும் நிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். உறவினருக்குள் விவாகாதி சுப சோபனக் கொண்டாட்டங்களும் நிகழுவதால் குடும்பத்தில் சந்தோஷமும் மன நிறைவும் ஏற்படும். உதவிகள் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் கடந்தகாலங்களிலும் பார்க்க இந்த மாதம் முன்னேற்றம் காணும். மருந்து, இயந்திர. தானியவகை வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் குறைவது பலபல பிரச்சினைகளை தோற்றுவிக்கும். மேலதிகாரிகள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பர். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகள் கிட்டும்.

விவசாயிகளுக்கு சனிபகவான் பலங்குன்றினும், இவரைப் பலம்பெற்ற குருபகவான் லாபத்திலிருந்து திருஷ்டி செய்வதால் விளைச்சல் கணிசமாகக் கூடும். லாபமும் சந்தை வசதியும் பெறுவர்.

தொழிலாளருக்கு இந்த மாதம் ஓரளவு வேலை வசதிகள் கிட்டும். வேலை கொள்வோர் உதவி ஒத்தாசைகள் செய்வர். விபத்துக்களையும் எதிர்கொள்ள நேரும். ஒப்பந்த வேலைகள் லாபந்தரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். கணித - விஞ்ஞானத் துறை மாணவர் சிறப்பான பலன் பெறுவர். ஆசிரியர் - மாணவர் ஒத்துழைப்பும் மலரும்.

பெண்கள் எண்ணங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து கொள்வார்கள். எனினும் முன்கோபமும் அவசர புத்தியும் சிலருக்குக் காரியத் தடைகளுக்கு ஏதுவாகும். விவாக முயற்சிகள் பெரும்பாலும் கைகூடும்.

அதிஷ்ட நாட்கள்:- செப்.18,22,23,26பி.ப.,27
அக்.1பி.ப.,2,3,7,8,16

துரதிஷ்ட நாட்கள்:-செப்.17ப,25,26மு.ப
அக் 9,10,13ப,14



# கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியன் ஜென்மத்தில் தாம்ரமூர்த்தி, குரு 10ல் தாம்ரமூர்த்தி, சனி 4ல் ரஜஸமூர்த்தி, செவ்வாய் ஜென்மத்தில் லோகமூர்த்தி, சுக்கிரன் 2ல் தாம்ரமூர்த்தி, 3-10 89 முதல் 3ல் ரஜஸமூர்த்தி புதன் சென்மத்தில் தாம்ரமூர்த்தி, இராகு 5லும் கேது 11லும் தாம்ரமூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்கின்றனர். இம் மாதமும் நவ நாயகரின் சஞ்சார பலம் குன்றுவதால் அதிக நற்பலனை எதிர்பார்க்க முடியாது. பொதுவாக இவர்களின் உடல்நலம், குடும்ப நலம் பாதிப்படையும். எதிர்பார்த்த பொருள்வரவும் கிடைப்பதரிது. வீண் செலவுகளும் அலைச்சலும் ஏமாற்றமும் ஏற்படும்,

குடும்பத்தவர்களுக்கு எதிர்பாராத திடீர் நெருக்கடிகள வருமானத்திலும் செலவுகள் கடன் பழு என்பன தொடரும். எவ்வாறுயினும் கணவன் மனைவி நல்லுறவு வளரும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமடையும். புதன் வக்கிரகதியில் அஸ்தமனமாய் உள்ளதால் கடன் நிலுவைகளும் வியாபார நெருக்கடிகளும் ஏற்படும். கள்ள மார்க்கெட் வீழ்ச்சியுறும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடி தொடரும். வேலைப்பழுவும் கூடும். வீண் விரயங்கள் ஏற்படலாம். சிலருக்கு பதவிமாற்றம் மற்றும் இட மாற்றங்கள் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்கு சனியை குரு திருஷ்டிப்பது பயிர் உற்பத்திச் செலவுகளைக் கூட்டும். ஆனல்

பயிர் விளைச்சலும் அதிகரிக்கும். நல்ல சந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளர் ஓரளவு வேலைவசதி பெறுவர். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் குறைந்தாலும் நட்டம் வராது. இயந்திர வேலைகள் செய்வோருக்கு அவதானம் தேவை.

மாணவர் கல்வி முன்னேற்றத்திற்குத் தடைகாரணிகள் அவ்வப்போது ஏற்படும். தன்னம்பிக்கையும் சுய முயற்சியுமே இவர்களுக்குத் துணை புரியும். அதனால் பரீட்சைகளில் தேர்ச்சி பெறவும் முடியும்.

பெண்களுக்கு சில சுய நலமிகளால் ஏமாற்றங்கள் ஏற்படலாம். உணர்ச்சிகளை அடக்கிப் பொறுமையுடன் நிதானமாகச் செயற்பட வேண்டும். விவாகாதி விடயங்கள் இழுபறிப்படும்.

அதிஷ்டநாட்கள்,- செப்.19இர,20,21,25,29,30
அக்.1மு.ப,4,5,9;10,11கா.

துரதிஷ்டநாட்கள்:- செப்.18,19ப,27,28
அக்.11ப,12,13கா,15ப,16



## துலாம்

சித்திரை 3,4 சுவாதி விசாகம் 1,2,3

துலாம் இராசியில் செனனமானவர்களுக்கு இந்தமாதம் சூரியன் 12ல் சுவர்ணமூர்த்தி, குரு 9ல் ரஜஸமூர்த்தி, சனி 3ல் சுவர்ணமூர்த்தி, செவ்வாய் 12ல் தாம்ரமூர்த்தி, புதன் 12ல் சுவர்ணமூர்த்தி, சுக்கிரன் 1ல் ரஜஸமூர்த்தி, 3-10-89 முதல் 2ல் சுவர்ணமூர்த்தி, இராகு 4லிலும் கேது 10லிலும் ரஜஸமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றார்கள். செவ்வாய் தவிர மற்ற எல்லாக் கிரகங்களும் மூர்த்திபலம் பெறுவது சிறப்பாகும். தேகசுகம் குடும்பசுகம் சிறப்பாக இருக்கும். பொருள் வருமானமும் அதிகரிக்கும். மங்கள கொண்டாட்டங்கள், காரிய அனுகூலங்கள், இராசாங்க உதவிகள், அதிஷ்டலாபங்கள் எதிர்பாராத பொருள் வரவுகள் எல்லாம் கிடைக்கச் சாதகமானகாலம்.

குடும்பத்தில் பெரும்பாலும் சிறப்புக்களும் மனநிறைவும் உண்டாகும். விவாகாதி சுபசோபனங்களும் நிகழும். வீட்டில் லட்சுமி கடாட்சமும் கிட்டும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும், நிதி வசதிகளும் கூடும். புதுமுதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் சிலருக்குப் பதவி உயர்ச்சி முதலியனவும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குச் சனி பலம் பெறுவதால் விளைச்சல் அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளிலும் நல்ல லாபம் கிடைக்கும். நல்ல சந்தை வாய்ப்பும் பெறுவர்.

தொழிலாளர்களுக்குச் சனி பலம் பெறுவது வேலைவசதிகள் அதிகரிக்கும். இரும்பு உருக்கு ஆலைகள் எண்ணெய்வகை ஆலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர் அதிகவருமானம் பெறுவர்.

மாணவர்களுக்குப் புதன், குரு, சுக்கிரர் பலம் பெறுவது கல்வி முன்னேற்றத்துக்கு ஏதுவாகும். மாணவர் சுயமுயற்சி அதிகரிக்கும். கணித, சட்ட, கலைத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்திகள் பெறலாம்.

பெண்களுக்கு மனவிருப்பங்களை பெறச் சாதகமானகாலம். விவாக முயற்சிகளும் கைகூடும்; குடும்பத்தில் நிகழும் சுபசோபன நிகழ்ச்சிகள் நிறைவு தரும்.

அதிஷ்டநாட்கள்:- செப்,22,24அ.கா,27,28
அக்.1பி.ப,2,3,7,8,12,13கா

துரதிஷ்டநாட்கள்;- செப்.17பக,20,21,29,30
அக்.1மு,ப,14,15கா.



## விருச்சிகம்

விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிக இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 11ல் ரஜஸமூர்த்தி, குரு 8ல் லோகமூர்த்தி, சனி 2ல் லோகமூர்த்தி, செவ்வாய் 11ல் ரஜஸமூர்த்தி, புதன் 11ல் ரஜஸமூர்த்தி சுக்கிரன் 12ல் சுவர்ணமூர்த்தி 3-10-89ன் மேல் 1ல் லோகமூர்த்தி இராகு 3லிலும் கேது 9லிலும் லோகமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றனர். பிரதான கிரகங்களில் சில மூர்த்திபலம் பெற்றாலும் கோசாரசஞ்சாரபலம் குறைவதால் நன்மை

தீமை கலந்த பலன்கள் தான் இந்த மாதமும் நிகழும். ஏழரைச் சனியின் கடைசிப்பகுதியும், அட்டமகுருவுமாகத் துர்க்கோசாரசஞ்சாரம் நிகழுவதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதே! பொதுவாக இவர்களுக்கு அடிக்கடி உடல்நலம் கெடும். வருமானத்திலும் செலவுகள் கூடும், வீட்டில் எந்த நேரமும் ஏதாவது பிரச்சனைகள் அவ்வப்போது ஏற்படவே செய்யும். சூரியன் பலம் பெறுவதால் உதவிகள் கிடைக்கும்.

குடும்பத்தின் வருமானம் வீழ்ச்சியுறும். கணவன் மனைவி பிரச்சனைகள், சச்சரவுகள் ஏற்படக்கூடும். கடன்பயமும் இனசனபந்துக்களின் பகை விரோதங்களும் உண்டாகும்.

வியாபாரம் இந்தமாதமும் முன்னேற்றமாகக் காணப்பட்டாலும் இவர்களுக்கு நிதிக்கஷ்டங்களும் ஏற்படும். புதன் பலம் பெறுவதால் தானிய வகை வியாபாரிகள் லாபம் பெறுவர்.

உத்தயோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். பதவி உயர்ச்சி முதலியன கிடையாவிட்டாலும் பதவிச் சிறப்புப் பெறுவர். வீண்செலவுகளையும் சமாளிக்க வேண்டி இருக்கும்.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் பயிர்ச்சேதம் தொடரும். பயிரழிவால் விளைச்சலும் குறையும். கூடியவரை விவசாய முதலீடுகளைக் குறைப்பது நன்மைதரும்.

தொழிலாளர் வேலையின்மையால் துன்புற நேரிடும். பலருக்கு முதலாளி தொழிலாளி பிணக்குகளால் வேலையை இழக்கவும் வேண்டியிருக்கும். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் கிட்டாது'

மாணவர் கல்விக்குழப்பநிலை நீடிக்கும். அதிகாரிகள் ஆசிரியர்களுடன் கருத்து வேறுபாடுகளும் வலுவடையும். சுயமுயற்சிகளையும் செய்யாமல் கல்வித் தேர்ச்சியும் குன்றும்.

பெண்களுக்கு நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாகக் காரியக்கேடுகள் அடிக்கடி நிகழக்கூடும், விவாகாதி முயற்சிகள் ஏமாற்றம் தோல்விகளில் கூட முடிந்தாலும் ஆச்சரியமில்லை.

அதிஷ்டநாட்கள்:- செப்.17பக,25,29,30
அக்.1மு.ப.4,5,9,10,13பக,14

துரதிஷ்டநாட்கள்:- செப்.17இர,18,22,23
அக்.1பி.ப,2,3,16.



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இந்த இராசிக்காரருக்கு இம்மாதம் சூரியன் 10ல் லோகமூர்த்தி, சனி ஜென்மத்தில் சுவர்ண மூர்த்தி, செவ்வாய் 10ல் சுவர்ணமூர்த்தி புதன் 10ல் லோகமூர்த்தி, சுக்கிரன் 11ல் லோகமூர்த்தி 3-10-89 முதல் 12ல் சுவர்ணமூர்த்தி இராகு 2லும் கேது 8லும் தாம்ரமூர்த்திகளாகிச் சஞ்சாரம் செய்கின்றார்கள். பொதுவாக இவர்களுக்கு இந்த மாதமும் நன்மை தீமைகள் கலந்த சமபலன்களே நிகழும். தேகசுகம் குடும்பசுகம் பெரும்பாலும் சீராக இருக்கும். பொருள்வருமானத்திலும் முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். பிரயாணங்களில் அலைச்சலும் வீண்விரயங்களுமுண்டாகும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். இராசியதிபன் சுபகோசாரத்தில் இருந்து திருஷ்டி செய்வதால் புத்திரர் உறவினரின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். வீட்டில் மங்களகாரியங்கள் நிகழும்;

வர்த்தகர்களுக்குப் புதன் மூர்த்திபலம் குன்றினாலும் தானபலம் பெறுவதால் முதலீடுகளால் வருமானம் வரத்தொடங்கும். பொதுவாகச் செலவுகள் கூடினாலும் நட்டம் வராது.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்புக்கள் கூடும். பதவியுயர்ச்சி இழுபறியில் தொடரும், சகஉத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் பெறுவர்,

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் ஏற்பட்டாலும் விளைச்சலும் அதிகரிக்கும். சந்தைப்படுத்துவதில் தரகர் முதலியோரின் சுரண்டல்களால் எதிர்பார்த்த லாபம் பெறுவது கடினம்,

தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் கிட்டினாலும் வருமானக் குறைவு ஏற்படும். தினச்சம்பளம் பெறுபவர்கள் நாளாந்த சீவனத்துக்குப் போதிய வருமானம் பெறுவர். ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் வராது,

மாணவர் கல்வி முன்னேற்றத்துக்கு தடைகள் தோன்றினாலும் தம்து சுயமுயற்சிகளால் தேர்ச்சி பெறுவர். ஆசிரியர்களின் உதவிகள்

கிடைக்கும். பரீட்சை முடிவுகளும் தோல்வியைத் தழுவலாம்.

பெண்களுக்கு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதால் காரியசித்திகள் கிட்டும். விவாக முயற்சிகளும் சிரமங்களுடன் கைகூடிவரும். குடும்பப் பெண்கள் ஆறுதலடைவார்கள்.

அதிஷ்டநாட்கள்:- செப்.18,19பக,27,28
அக்.2,3,7,8,11பக,15பக,16

துரதிஷ்டநாட்கள்:- செப்.19இர,20,21,25,26
அக்.4,5,6மு.ப.



# மகரம்

உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியன் 9ல் தாம்பரமூர்த்தி, குரு 6ல் சுவர்ணமூர்த்தி, சனி 12ல் தாம்ரமூர்த்தி, செவ்வாய் 9ல் லோகமூர்த்தி புதன் 9ல் தாம்ரமூர்த்தி, சுக்கிரன் 10ல் சுவர்ணமூர்த்தி 3-10-89 முதல் 11ல் தாம்பரமூர்த்தி, இராகு 1லும் கேது 7லிலும் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வதனால் நன்மைதீமை கலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். அலைச்சல் மூலம் காரியசித்தி, இனசனபந்துக்களின் பகைவிரோதம் அந்நிய தேச சஞ்சாரம், வீடுவாகன பீடை என்பன நிகழும். குரு முதலிய பெரியவர்களின் உதவி ஒத்தாசைகள், புண்ணிய யாத்திரைப் பலன்கள் முதலானவையும் நிகழலாம்.

குடும்பச் செலவுகள் கூடிக்கொண்டே செல்லும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் நிகழ்ந்தாலும் ஒரளவில் அமைதியுமிருக்கும். எதிர்பாராத திடீர் நெருக்கடி ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலையும் நிதி நெருக்கடிகளும் ஏற்படும். முதலீடுகளின் வருமானமும் குறைவுறும். நிலுவைக் கடன்கள் பிரச்சினைகளைக்கூட ஏற்படுத்தும். கள்ளமார்க்கட் வியாபாரிகள் பெரும் நட்டமடைவர்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். உத்தியோக சம்பந்தமான வீண் செலவுகள் கஷ்டப்பிரதேச இடமாற்றங்கள் சிலருக்கு ஏற்படும்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு கூடிக்கொண்டே போகும். விளைச்சலும் குறையும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடையாது. கூடிய வரை விவசாயமுதலீடுகளைக் குறைப்பது நல்லது.

தொழிலாளர்கட்கு அலைச்சல், ஏமாற்றம், வேலையில்லாப் பிரச்சினை பெரிதும் துன்பம்தரும். இவர்களில் அனேகருக்கு நாளாந்த சீவியக்கஷ்டமும் ஏற்படும். கிடைக்கும் வேலைகளில் விபத்தும் ஒப்பந்தவேலைகளில் நட்டமும் தரும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தடைப்படும். மாணவர் மனநிலைகெட்டுத் தடுமாறுவர். ஆசிரியர் மாணவர் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுவது கடினம். பரீட்சைப் பெறுபேறுகள் மன நிறைவைத் தரா.

பெண்களுக்கு இம்மாதமும் பலப்பல துன்பச் சூழ்நிலைகளுடன் போராடவேண்டியிருக்கும். விவாகாதி முயற்சிகள் இழுபறிநிலையிலிருக்கும். வீண் வதந்திகளால் சிலர் அவமானப்படவும் கூடும்.

அதிஷ்ட நாட்கள்: செப். 17பக,20,21,29,30
அக்.1,4,5,9,10,11காலை

துரதிஷ்ட நாட்கள் செப்.22,23,27,28
அக்.6பி.ப,7,8



# கும்பம்

அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசிக் காரருக்கு இந்த மாதம் சூரியன் 8ல் ரஜஸமூர்த்தி குரு 5ல் ரஜஸமூர்த்தி சனி 11 இல் ரஜஸமூர்த்தி செவ்வாய் 8ல் சுவர்ணமூர்த்தி புதன் 8ல் ரஜஸமூர்த்தி சுக்கிரன் 9ல் தாம்பரமூர்த்தி 3-10-89 முதல் 10ல் ரஜஸமூர்த்தி ராகு 12லும் கேது 6லும் ரஜஸமூர்த்தியாக வலம் வருவது பெரும்பாலும் நற்பலன்களையே தரும். இராசியதிபன் சனி இலாபத்தில் மூர்த்தி பெலம் பெற்று இராசியைத் திருஷ்டிப்பது சிறப்பாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் குடும்பநலம் சீராக இருக்கும், பெரியோர் உதவிகள் வீடு-வாகனச்சிறப்பு அந்நியர் உதவி அந்நியதேசப் பொருள்வரவு மங்கள வைபவங்கள் முதலிய சுப பலன்களும் ராகு 12ல் இருப்பதால் விபத்துக்கள் முதலிய துர்ப்பலன்களும் நிகழும்.

குடும்பச்சிறப்பும் பொருள்வரவும் குடும்பத்தவர்களுக்கு மன நிறைவு தரும். விவாகாதி சுப மங்களக் கொண்டாட்டங்களும் இன சன பந்துக்களின் உதவி ஒத்தாசைகளும் கிட்டும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபாரம் நன்றே தொடரும். இரும்பு எண்ணெய், தானியவகை வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். வாடிக்கையாளர் ஒத்துழைப்பர்.

உத்தியோகத்தர்களுக்கு பதவிச்சிறப்பு-பதவி உயர்ச்சி-பதவி உறுதி முதலியன கிடைக்கச் சாதகமான காலம். அதிகாரிகளின் நல்லெண்ண பாராட்டும் மனதிற்கினிய இடமாற்றமும் வரும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் கணிசமாக அதிகரிக்கும். அரசமானியம் - பசளைகள் - மருந்து வகைகள் உரியகாலங்களில் கிடைக்கும். நல்ல சந்தைவாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் அதிகரிக்கும். வேலைகொள்ளுவோருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் வளரும். இரும்பு உருக்கு வேலைசெய்வோர் லாபம் பெறுவர். ஒப்பந்தவேலைகள் லாபந்தரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். மாணவர் மத்தியில் கல்வி ஆர்வமும் சுயமுயற்சியும் வளரும். சட்டத்துறை கணிதத்துறை மாணவர் சிறப்புச் சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு வேண்டியவர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். பெரும்பாலும் இவர்களின் தேவைகள் எல்லாம் நிறைவேறும. சிலருக்கு விவாகசித்திகூடக் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்.- செப்.17இர.18,19ப;22,23
அக்,1,,3,7,8,15,16.

துரதிஷ்டநாட்கள்:-செப்.24கா.25,29,30
அக். 1மு.ப.9,10,11கா.




பூராட்டாதி 4ம் கால், உத்தராட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியன் 7ல் சுவர்ண மூர்த்தி குரு 4ல் லோக மூர்த்தி சனி 10ல் லோகமூர்த்தி செவ்வாய் 7ல் தாம்ர மூர்த்தி சுக்கிரன் 8ல் ரஜஸமூர்த்தி 3-10-89 முதல் 9ல் லோகமூர்த்தி, புதன் 7ல் சுவர்ணமூர்த்தி இராகு 11லிலும் கேது 5லிலும் லோகமூர்த்தியாகவும் பெரும்பாலும் மூர்த்தி பலமிழந்து வலம் வருவது நன்மைதராது. தேகசுகம் குடும்பசுகம் என்பன அடிக்கடி பாதிப்படையும். பொருள் வருமானத்திலும் செலவுகள் கூடிக்கொண்டு போதலால் கடன்பயமும் ஏற்படும். புத்திரர் பந்து மித்திரர் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதும் கடினம்.

குடும்பத்தில் பிணி பீடைகள் சச்சரவுகள் இடைக்கிடை தோன்றி மறையும். குடும்பவருமானம் போதாமையால் கடன் பயம் ஏற்படும். பொறுமைக்குச் சோதனையான காலம்.

வர்த்தகர்களுக்கு நிதிநெருக்கடிகளும் பழைய நிலுவைக் கடன்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். கறுப்புச்சந்தை வியாபாரிகளுக்கு நட்டம் கூடும். முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் மேலதிகாரிகளின் நல்லெண்ணம் வளரும். ஆனால் வேலைப் பொறுப்பும் வேலைப்பழுவும் கூடும். வீண் செலவுகளால் வருமானம் பற்றுக்குறைவும் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவு அதிகரிக்கும்; விளைவுகளும் குறைவுறும் கூலியாட்களின் கெடுபிடிகளும் அதிகரிக்கும். விவசாய முதலீடுகளைக் குறைப்பது நன்மை தரும்.

தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் குறைவுறும். தொழில் பிணக்குகள் போராட்டங்கள் இவர்களின் வருமானத்தைக் குறைக்கும் தொழில் ஒப்பந்த வேலைகளும் லாபம் பெறுவது கடினம்.

மாணவர் போராட்டங்களில் ஈடுபடுவதால் கல்வி ஊக்கமும் குன்றும். பரீட்சைகளில் தேர்ச்சி பெறுவதும் கடினமே.

பெண்களுக்குக் காரியத்தடைகளே பெரும்பாலும் ஏற்படும். விவாகாதி முயற்சிகளும் இழுபறியாகவே இருக்கும்; பல கஷ்ட நட்டங்களைச் சமாளிக்க வேண்டி இருக்கும்.

அதிஷ்டநாட்கள்;- செ. 17பக 20,21,25
அக்.4,5,9,10,13பக 14

துரதிஷ்டநாட்கள்:- செ.26பி.ப 27,28
அக் 2,3,11ப 12

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

(முன்தொடர்ச்சி)

## தொடர் 17

பெயரை அதிஷ்ட எண்ணில் மாற்றியவுடனேயோ அன்றி அதைப் பயிற்சி செய்யாமலோ திடீரென நற்பலன்கள் கிடைக்க வேண்டுமென அநேகர் எதிர்பார்க்கின்றார்கள். மேலும் சிலர் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் கடைப்பிடித்து பயிற்சிக்காமல் - ஏனோதானோவென்று அலட்சியப்படுத்தி எழுதுவதால் கிரகச்சக்தி அதிகரிக்காது. பலன்கள் மாற்றமடையாது இருக்கின்றது. இதனால் அதிஷ்ட எண்ஞானத்தில் நம்பிக்கை இழக்கின்றார்கள் இது தவறாகும்.

முறைப்படி பயிற்சி செய்து வந்தால் நிட்சயம் அதிகரிக்கும். நீங்கள் மாற்றிய அதிஷ்ட எண்பெயரை பயிற்சி செய்யும் முறையை உங்கள் முன் 9 பிரிவாக - 9 கட்டளைகளாக அறிமுகப்படுத்துகின்றேன். முதலாம் முறையான தெய்வ வழிபாட்டுடன் அதிஷ்ட நாள், சுபநேரத்தில் தொடங்க வேண்டும். உதாரணமாக சூரிய ஆதிக்கம் உள்ளவர்கள் 1,10,19ம் திகதிகளில் ஒன்றைத் தெரிவு செய்வதுடன் இராகு காலங்கழிந்த சுபநேரத்தில் தமது பெயரை எழுதத் தொடங்க வேண்டும். அடுத்த முறையாக பிறந்த தினத்தைப் போன்று அன்றைய தினத்தைக் கொண்டாட வேண்டும். எனச் சென்றமுறை விளக்கினேன்; ஏனையவைகளை இப்பொழுது பார்ப்போம்.

(3) எச்சந்தர்ப்பத்திலும் இனிசலில்லாமல் அல்லது தகப்பனின் முதல் எழுத்தில்லாமல் பெயரைப் பயிற்சித்து வரக்கூடாது. முக்கியமாக மாற்றிய அதிஷ்டப் பெயர் எண் இனிசலுடன் இருக்க வேண்டும். உதாரணமாக உங்கள் பெயர் இ. குணம் என்றிருந்தால் இ. குணம் என எழுத வேண்டுமே ஒழிய குணம் என மாத்திரம் எழுதிப் பயிற்சிக்கக்கூடாது.

(4) தமது பெயருக்கு முன்பு இலக்கம் இடக்கூடாது; உதாரணமாக - 1,2,3 என இலக்கமிடக்கூடாது. ஏனெனில் அந்த இலக்கமும் பலனை மாற்றக்கூடியது.

(5) அதிஷ்டப் பெயர் எண்ணின் மொத்த இலக்கத்தையோ அல்லது நாம் எழுதி வருவதைப் பற்றியோ பிறருக்கு கண்டபடி சொல்லக்கூடாது. உதாரணமாக - ஒருவரின் இனிசலுடன் சேர்ந்த பெயர் எண் 37 ஆயின் அதை இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

(6) பயிற்சி செய்யும் போது தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சண்டை செய்யக்கூடாது எவரையும் திட்டக்கூடாது. புகைபிடித்தல், மது பானம் அருந்துதலை நிறுத்தல் வேண்டும்.

(7) குறிப்பிட்டவர் அதிஷ்டப் பெயருக்கேற்ற மொத்த எண் அல்லது ஒற்றை, கூட்டு எண்களுடைய இலக்க வீட்டில் அல்லது அறைகளில் குடியிருக்க வேண்டும். உ-ம் 37 மொத்த எண்ணானால் 1, 2 அல்லது 3 வரக்கூடிய வீடுகளில் குடியிருக்கவும். அதாவது 1,10,19,37,46,64,73 இலக்க வீட்டில் குடியிருக்கவும்.

(8) கிரகச் சக்தியை அதிகரிக்கும் முறை - பிறப்பெண், பெயர் எண்ணுக்குப் பொருத்தமான அதிஷ்டத் திகதிகளிலும், கிழமைகளிலும் முக்கிய காரியங்களைச் செய்து வரவேண்டும். அதிஷ்ட நிறங்களில் உடுப்புக்களையும் பாவனைப் பொருட்களையும் பாவித்து வரலாம். மோதிரம், நகைகளில் ஏற்ற இரத்தினங்களைப் பதித்து பாவனைப் படுத்தி வரலாம். இவைகளைப்பற்றி அடுத்தடுத்த பேச்சுக்களில் விபரமாகக் குறிப்பிடுவோம். உ-ம் 37-ம் எண்காரர் மஞ்சள், வெள்ளை நிறத்தையும் புஷ்பராகம் முத்து, தங்கம் என் பனவற்றையும் பாவித்துவரலாம்.

(9) பயப்படக்கூடாது-நாம் ஒருவரின் உயிர்ச் செறிவை அவதானித்து பெயரை மாற்றுவதால் குறிப்பிட்டவர் எழுதிவரும் பொழுது உடல், மனோ நிலைகளில் மாற்றங்கள் ஏற்படும். சிலருக்கு காய்ச்சல், தலையிடி என்பனவும் சிலருக்கு உள்ளத் தாக்கம், பிரச்சனைகள் ஏற்படச் செய்

(19-ம் பக்கம் பார்க்க)

# சக்தி விரதங்கள்

'கோப்பாய் – சிவம்'

சென்ற இதழ் தொடர்ச்சி

## நவராத்திரி விரதம்

வீடுகளில் நவராத்திரி பூஜையை ஆனந்தமான ஒரு கொண்டாட்டமாகவே கொள்வர். தூய்மையுடனும், அழகுப் பொலிவுடனும் திகழும் கொலுமண்டபத்தை அமைத்து அங்கு பூர்வாங்க பூஜைகளுடனும், சங்கல்பபூர்வமாகவும் முறைப்படி கும்பத்தை ஸ்தாபிக்க வேண்டும். சந்திரகும்பம் தனியாக வைக்காமல் சக்தி கும்பத்தை மண்குடத்தில் வைத்துச் சுற்றிவர மண் பரப்பி அதிலே நவதானியங்களிட்டு முளைக்கவிடுவது பல இடங்களில் வழக்கமாக உள்ளது. இந்த நவதானியத்தின் செழிப்பைத் தமது குடும்ப வளத்தின் நன்மைதீமைகளை அறியும் சகுனமாகக் கொள்வார்கள்.

வீடுகளில் கொலுவைத்தல் நவராத்திரியின் விசேஷ அம்சமாகும். படிப்படியாக அமைக்கப்பட்ட விசேஷமான பீடங்களில் அல்லது மாடிப்படிகளில் விதவிதமான பொம்மை எனப்படுகின்ற பல பதுமைகளை அழகாக அடுக்கிவைத்து அலங்கரித்து இக்கொலு அமைக்கப்படுகிறது. 5,7,9 என படிகளின் எண்ணிக்கை ஒற்றைப்படையாக அருகிலேயே கும்பம்வைத்து, சுவாமிப்படங்களையும் மாட்டி அணையாவிளக்குகள் ஏற்றி ஒன்பது நாட்களிலும் விதவிதமான பட்சணங்களை நைவேத்தியம் செய்து பூஜித்தல் முறை. முக்கியமாக அவல், கடலைச்சுண்டல் என்பன நவராத்திரியில் அம்பிகைக்கான விசேஷ நிவேதனங்களாம்; நாவற்பழம், கற்கண்டு முதலியனவும் வெற்றிலை பாக்கு, பழவகை, தேங்காய் என்பனவும் படைக்கப்படும்.

சுமங்கலிப் பெண்களை இவ்விரத நாட்களில் வீட்டுக்கு அழைத்து அவர்களைப் பராசக்தியாகப் பாவித்துக் கொலுவின் அருகில் அமரச் செய்து வணங்கி மஞ்சள், குங்குமம், பட்டு, நாணயம், தாம்பூலம், என்பவற்றை வழங்குவர். 'கொலுவுக்கு அழைத்தல்' என இதனைக் கூறுவர். சுமங்கலிப் பிரார்த்தனை, சுவாசினிபூஜை என்று விரிவான முறையில் நடத்தப்பெறும் சாந்திகளின் சுருங்கிய வடிவமாக இதனைக் கருதலாம்.

நவராத்திரியின் பிரதான நாளாகிய மஹா நவமியன்று சரஸ்வதிபூஜை என்றும், கலைமகள் விழா என்றும் சிறப்பித்துக் கூறப்படுவதுடன் ஆயுதபூஜை என்றும் கூறப்படுகிறது. கல்விக் கூடங்களிலும், கலைக்கூடங்களிலும், தொழிற் சாலைகளிலும் இத்தினம் மிகுந்த பயபக்தியுடனும் அதேநேரம் ஆனந்த கோலாகலத்துடனும் கொண்டாடப்படுகிறது.

புத்தகங்கள் சரஸ்வதிதேவியின் உறைவிடம். கலைப்பொருட்கள், இசைக்கருவிகள், தொழிற்கருவிகள் முதலிய ஆயுதங்களுக்கும் அதிபதி அவளே. இதனால் மஹாநவமியாகிய அன்றைய நாள் இவற்றைப் பூஜையில் வைத்து வழிபடுவர் அது மட்டுமல்லாமல் அத்தினத்தில் இவற்றைப் பயன்படுத்துவதும் தவிர்க்கப்படுகிறது.

அதாவது வாசிப்பது, எழுதுவது, கருவிகளைப் பயன்படுத்தித் தொழில் செய்வது, இசைக்கருவிகளை இசைப்பது, ஆயுதங்களைப் பயன்படுத்துவது என்பனயாவும் அன்று கைவிடப்பட்டு உபவாசம், பூஜைவழிபாடுகள், பிரார்த்தனைகள் முதலிய இறைபணிகளே செய்யப்பட வேண்டும். பஜனைகளைப்பாடுவது, அதில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது என்பன பற்றிச் சிலருக்கு ஐயமேற்படலாம். ஆனால் அவை குற்றமல்ல, சொந்த லாபத்துக்காக அவற்றைப் பயன்படுத்தாமல் அம்பிகையின் வழிபாட்டுக்கே பயன்படுத்துவதால் அது சரியானதே!

நவராத்திரி காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகுதல் விலக்கப்பட்டுள்ளது. ஊசி நூல் கொண்டு பழந்துணி தைப்பதும் கூடாது. புரட்டாதிச்சனிவிரதம் இந்த நவராத்திரி நாளினுள் வரும்போது எண்ணெய் தேய்க்காது நீராடி அந்த விரதத்தையும் கைக்கொள்ளலாம். எண்ணெய் எரித்து வழிபடுதலும் செய்யலாம்.

பாரதநாட்டில் நவராத்திரி ஒன்பது நாட்களும், சில இடங்களில் விஜயதசமியுடன் பத்து நாட்களும் ஓய்வு நாட்களாகப் பாடசாலை விடுமுறை விடப்படுவது வழக்கம். சில இடங்களில் இந்தப் பத்துநாள் விழாவைத் 'தசரா' என்று கூறுவர். மைசூர் தசரா உலகப் புகழ்பெற்ற பண்டிகையாகும். வடஇந்திய மாநிலமான உத்தரப் பிரதேச மக்கள் இதனை "ராம்லீலா" என்று கொண்டாடுகின்றனர். வங்காளிகள் காளிபூஜையாகவும் துர்க்காபூஜையாகவும் கொள்கின்றனர்.

நவராத்திரி விரதத்தை முறையாகக் கைக்கொள்ள விரும்புவோர் முதலெட்டு நாட்களிலும் பகலில் உணவின்றி இரவில் பூஜை முடிந்தபின் பால்பழம், பலகாரம் என்பன சாப்பிட்டு நவமியில் உபவாசமிருந்து இறுதி நாள் விஜய தசமியன்று காலை எட்டரை மணிக்கு முன் பாரணை செய்ய வேண்டும். முடியாதவர்கள் முதலெட்டு நாளிலும் ஒருநேர உணவுண்டு (பகல் அன்னம்) கடைசிநாளில் பால்பழம் மட்டும் கொள்ளலாம்.

விஜயதசமியன்று காலை அறுசுவை உண்டி சமைத்து அதனை நிவேதித்து விசேஷபூஜை செய்த பின் நாட்படிப்பு நாட்கருமங்களை ஆரம்பித்தபின் பாரணை செய்வதேமுறை. ஒன்பது வருடங்கள் தொடர்ந்து இவ்விரதம் அநுஷ்டித்தபின் விரதோத்யாபனம் செய்யலாம்.

## நீ

கோப்பாய்
எஸ். சிவம்

உடலுக்கு மருத்துவம் நாம் கண்டோம்—தேவி
உளத்துக்கு மருந்தே நீஅல்லவோ?
கடலுக்கும் ஆழத்தை நாம் அறிந்தோம்—தேவி
காலத்தின் எல்லையே நீஅல்லவோ?

சந்திர மண்டலம் நாம் வென்றோம்—அண்ட
சராசரம் வென்றவள் நீஅல்லவோ?
மந்திரம் தந்திரம் நாம் படித்தோம்—அந்த
மந்திரம் கடந்தவள் நீஅல்லவோ?

கருவிகள் பலபல நாம் அமைத்தோம்—எம்மைக்
கருவினில் அமைத்தவள் நீஅல்லவோ?
மருமங்கள் பலவற்றை நாம் தெளிந்தோம்–இன்னும்
மர்மங்கள் ஆனவள் நீஅல்லவோ?

இசைபல நாம்கண்டு பாடி நின்றோம்—அந்த
இசைவடி வானவள் நீஅல்லவோ?
இசைவுடன் உனைத்தினம் நாம் துதித்தோம்—இங்கு
எம்முடன் கலந்தவள் நீஅல்லவா?

அதிஷ்ட எண்...... (17-ம் பக்கத் தொடர்ச்சி)
யும் பலருக்கோ ஆரம்பத்திலிருந்து நன்மையான பலன்கள் அதிகரிக்கும். எவ்வித பயமுமின்றித் தொடர்ந்து பயிற்சித்து வரவேண்டும். கிட்டத்தட்ட 10,0000தரம் எழுதிவர ஏற்பட்ட எவ்வித உடல் மனோ தாக்கங்களும் மறைந்து சுபப்பலன்கள் அதிகரிக்கும்.

நான் உங்கள் முன் சமர்ப்பிக்கும் இந்த 9 கட்டளைகளை அதிஷ்டப் பெயர் எண்களில் பயிற்சிப்படுத்தி வருபவர்கள் நிட்சயம் கைக்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளின்படி உறுதியுடன் நீங்கள் செயற்பட வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கையில் ஏற்படுகின்ற எந்தப் பிரச்சனைகளையும் தீர்க்கமுடியும். தன்னம்பிக்கை விடாமுயற்சி, உறுதியான கொள்கை என்பன அதிஷ்ட எண்ணைப் பயிற்சிப் படுத்தும் போது எம்மால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இதனால் ஒருவருக்கு நோயைக் குணப்படுத்தவும் குடும்ப வாழ்வில் சந்தோஷமாக இருக்கவும், பிரிந்த தம்பதிகளைச் சேர்க்கவும், திருமணமாகாமல் இருக்கும் பெண்கள் நல்ல கணவனை அடையவும், நித்தமும் குடும்பச் சச்சரவுடன் இருப்பவர்கள் ஒற்றுமையாக இருக்கவும், தொழிற் பிரச்சனைகள் ஏற்படுவதை பெயர்மாற்றி அமைப்பதால் தீர்த்துக் கொள்ளவும் முடியும். மேலும் வெளிநாட்டுப் பிரயாணங்களால் சிறப்படையவும் முடியும்.

மாற்றிய அதிஷ்டப் பெயரைத் தினமும் 108 தரவீதம் தொடர்ந்து 1 இலட்சத்திற்கு எழுதிவரவும். எழுதும் கொப்பி முடிந்தால் அடுத்த கொப்பியில் தொடரவும். ஆனால் எல்லாக் கொப்பிகளையும் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். தினமும் 1008 தரம் எழுதினால் அதிவேகமான பலன்கள் தாக்கங்கள் ஏற்படும். தொடர்ந்து 3 மாதம் எழுதிவரவும். முக்கியமான விஷயங்களாவன; எழுதும்போது மன அமைதி அடக்கத்தோடு தெய்வ பக்தியுடன் ஆசாரமாக எழுதி வரவேண்டும். பெயருக்கு முன்பு 1,2,3 என்று தொடர் இலக்கங்களைப் போடக்கூடாது. இனிசலோடு சேர்த்தே பெயரை எழுத வேண்டும். எழுதும்போது மனத்துள் சரியாக உச்சரித்து எழுதவேண்டும். தொடர்ந்து 1 இலட்சம் தரம் எழுதினால் பூரண பலனைப் பெறலாம்.

முற்றும்

# இராகு - கேது மாற்றம் நன்மை தருமா?

நிகழும் சுக்ல வருடம் புரட்டாதி மாதம் 7-ம் நாள் சனிக்கிழமை இரவு 11-16 மணியளவில் சாயாக்கிரகங்களாகிய இராகு – கேதுக்கள் கும்ப, சிங்க இராசிகளிலிருந்து பின்னோக்கி முறையே மகர, கடக இராசிகளில் பிரவேசிக்கின்றார்கள். இச்சாயாக்கிரகங்கள் மேற்படி இராசிகளில் ஒன்றரை வருடகாலம் சஞ்சரிப்பார்கள்.

இராசிமண்டலத்தில் 4-ம் இராசி உலக நிம்மதி, சமாதானத்தைக் குறிக்கும். இராகு மாயைக் கிரகம். கேது கர்மக்கிரகம். கேது 4-ம் இராசிக்கு மாற்றமடைவதால் உலகத்தில் சமாதானம், நிம்மதி என்பன கேள்விக்குறியாகவே இருக்கும். ராகு 10-ம் இராசியில் சஞ்சாரம் செய்வதால் உலகின் பலபாகங்களிலும் அடக்கமின்மையும், கொந்தளிப்பான நிலையும் ஏற்பட இடமுண்டு.

இலங்கையைப் பொறுத்த மட்டில் இலங்கையை ஆளும் கும்பராசிக்கு 12-ம் இடத்தில் இராகுவும் 6-ல் கேதுவும் சஞ்சரிக்கின்றன. ராகு கும்பராசியில் இருந்து சனீஸ்வரனின் திருஷ்டியைப் பெற்றிருந்தமையால் நாட்டில் அமைதியின்மையும், வன்முறைகளும் தலைவிரித்தாடின. இராகு கும்பராசியை விட்டு நீங்குவதால் சற்று முன்னேற்றம் தரக்கூடிய சூழ்நிலையே தென்படுகின்றது. கும்பராசிக்கு வியாழனின் பார்வை இருப்பதாலும் நற்பலன்களை எதிர்பார்க்க இடமுண்டு.

இராகு கேதுக்கள் மகர, கடக இராசிகளில் சஞ்சரிக்கும் ஒன்றரை வருடகாலங்கட்கு தனிப்பட்டவர்களின் பலாபலன்களை ஆராய்வோம்.

## மேடம்

இவ்விராசியினருக்கு ராகு, கேதுக்கள் ரஜத மூர்த்தியாக 10-ம், 4-ம் ராசிகளில் முறையே சஞ்சரிக்கின்றன. இக்காலம் குடும்பசுகம், தொழில் முன்னேற்றம், மாதாவழிக்கஷ்டம், வாகனசுகம், என்பன உண்டாகும். சுற்றத்தவர், நண்பர்களால் உதவிகள் கிட்டும். தொழில் சம்பந்தமான பதவியுயர்வும் கிடைக்கலாகும். பெரியோர் மதிப்பும், பாராட்டும் ஏற்படும். மனநிம்மதியும், சந்தோஷமும் அதிகரிக்க இடமுண்டு.

## இடபம்

இடபராசியிற் பிறந்தவர்கட்கு சாயாக் கிரகங்களாகிய ராகு, கேதுக்கள் முறையே 9-ம், 3-ம் இராசிகளுக்கு சுவர்ணமூர்த்தியாக மாற்றமடைவதால் செய்தொழில் விருத்தி, குடும்பசுகம், தேகசுகம் என்பன ஏற்படலாகும். எதிர்பாராத லாபங்களும் கிட்டும். பல விடயங்களும் நன்மையானதாகவே நடக்கும். வாழ்க்கை வளம்பெறும். கல்வித்துறையும் சிறப்படையும். மனச்சந்தோஷம் அதிகரிக்கும்.

## மிதுனம்

இவர்களுக்கு இராகு கேதுக்கள் யோகமூர்த்தியாக 8-ம், 2-ம் இராசிகளில் சஞ்சாரம் செய்கின்றன. பணச்செலவு, பிரயாணசை என்பன அதிகமாகும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். தொழில் துறையில் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றத்தையேதரும். குடும்ப சுகக்குறைவும், நிம்மதியின்மையும் உண்டாகும். இவ்விராசியினருக்கு ஜன்மராசியில் வியாழன் சஞ்சரிப்பதும் கஷ்டபலன்கள் நிகழ்வதற்கு ஏதுவாகின்றன. அம்பாள் வழிபாடு செய்து வரவும்.

## கடகம்

கடகராசியினருக்கு மாயைக்கிரகமாகிய இராகுவும் கர்மக்கிரகமாகிய கேதுவும் சுவர்ண மூர்த்தியாக முறையே 7-ம், 1-ம் ராசிகளில் பிரவேசிக்கின்றன. மூர்த்திபலம் நன்றாக இருப்பதால் நற்பலன்களே கூடுதலாக நிகழும். தேகசுகம் நன்றாக இருக்கும். தாரவழியில் சில மனத்தாங்கல்கள் ஏற்பட்டு பின்னர் சுமுகநிலை தென்படும். நிதி நிலமை திருப்தியளிக்கும். தொழில் துறையில் வருவாய் நன்றாக இருக்கும். விஷ ஜந்துக்களால் பாதிப்பு ஏற்படவும் கூடும்.

## சிங்கம்

இவ்விராசியில் ஜனனமானோருக்கு இராகு, கேதுக்கள் முறையே 6-ம் 12-ம் இராசியில் தாம்ர மூர்த்தியாகச் சஞ்சரிக்கின்றன. மூர்த்திபலம், ஸ்தானபலம் இரண்டும் குன்றியிருப்பதனால் மறைமுக எதிர்ப்புக்களும், தேகசுகக் குறைவும் ஏற்படலாம். மனநிம்மதி குன்றும். இவர்களுக்கு 11-ல்

வியாழன் சஞ்சரிப்பதனுல் எதையும் சமாளிக்கக் கூடிய நிலமை ஏற்படும். உறவினர், நண்பர்களி டையேயும் மனவேற்றுமை ஏற்படக்கூடும். ராகு, கேதுக்களுக்குப் பிரீதியாக அம்பாள் வழிபாடு மேற்கொள்வது நன்மையளிக்கும்.

## கன்னி

இவர்களுக்கு ஒன்றரை வருடகாலம் ராகு, கேதுக்கள் ரஜதமூர்த்தியாகி 5-ம் 11-ம் இராசிக ளில் சஞ்சரிக்கவுள்ளனர். செய்தொழிலில் வெற்றி கிட்டும். எதிர்பாராத லாபங்களும், முன்னேற் றமும் ஏற்படலாகும். குடும்பசுகம், தேகசுகம் என்பன சிறப்பாக அமையும். பெரியோர் மதிப் பும் நண்பர்களின் ஆதரவும் உண்டாகும். எண் ணிய கருமங்கள் எண்ணம்போல் கைகூடிவரும். புத்திரரின் ஒத்துழைப்பும் தாராளமாகக் கிட்டும்.

## துலாம்

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இராகு, கேதுக்கள் லோகமூர்த்தியாக 4-ம் ,10-ம் இராசிக ளில் சஞ்சரிக்கவுள்ளன: தொழிற்துறையில் பொறுப்புக்கள் அதிகரிக்கும். மனநிம்மதி குறை வடையும். குடும்பசுகம், தேகசுகம் என்பன இடை யிடையே பாதிக்கப்படும். தொடங்கும் கருமங் கள் தாமதமாகவே அனுகூலமாகும். இருப்பிட வசதிக்குறைவும் ஏற்படும். நிதி நிலைமை திருப்தி யாக இருக்காது. எனினும் இவர்களுக்கு குரு, சனி என்பவற்றின் நற்சஞ்சாரம் நிம்மதியை ஏற் படுத்தும்.

## விருச்சிகம்

விருச்சிக இராசியினருக்கு சாயாக்கிரகங்கள் 3-ம், 9-ம் இராசிகளில் தாம்ரமூர்த்தியாகச் சஞ் சரிக்கின்றன. மூர்த்திபலம் குறைவுறுவதால் நற் பலன்களை எதிர்பார்ப்பது கஷ்டம். குடும்பசுகம் தேகசுகம் என்பன நன்ருக இருக்காது. நினைத்த கருமங்கள் எளிதில் அனுகூலமாகாது. தொழில் முன்னேற்றம், வருமானம் என்பன பாதிக்கப்படும் நண்பர்கள், உறவினர்களின் ஆதரவும் கிடை யாது. ஏழரைச்சனி, அட்டமத்து வியாழன் என் பனவும் நடப்பதால் இவ்விராசியினருக்கு கஷ்ட பலன்கள் அதிகமாகும். வழிபாட்டு முறைகளை மேற்கொள்ளவும்.

## தனுசு

இவர்களுக்கு இராகு, கேதுக்கள் முறையே 2-ம், 8-ம் இராசிகளில் சுவர்ணமூர்த்தியாகப் பவனிவருகின்றன. தேகசுகம், குடும்பசுகம் என் பன சிறப்படையும். பணவருவாய், தொழிற் சிறப்பு, முன்னேற்றம் ஆகியன விருத்தியடை யும். நினைத்த கருமங்கள் அனுகூலமாவதில் தடை கள் இருக்காது. எதிர்ப்புக்களைச் சமாளித்து முன் னேறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டாகும். மனச் சந்தோஷம் ஏற்படும்.

## மகரம்

மகரராசியினர்க்கு இராகு, கேதுக்கள் 1-ம் 7-ம் இராசிகளில் ரஜதமூர்த்தியாகப் பிரவேசிக் கின்றன. நினைத்தகருமங்கள் எண்ணம்போல் கை கூடும். குடும்பசுகம், தேகசுகம் என்பன திருப்தி யாக இருக்கும். 7-ல் கேது இருப்பதால் தாரவழி யில் மனவிரக்தி உண்டாகலாம். உறவினர், நண் பர்களின் உதவிகள் கிட்டும். முயற்சிகளுக்கேற்ப வெற்றியும், லாபமும் ஏற்படும். விஷ ஜந்துக்க ளைப்பற்றி அவதானந்தேவை.

## கும்பம்

இவர்களுக்கு இராகு, கேதுக்கள் லோகமூர்த் தியாக முறையே 12-ம், 6-ம் இராசிகளில் சஞ் சாரம் செய்கின்றன. மூர்த்திபலம், ஸ்தானபலம் இரண்டும் குன்றுவதால் நற்பலன்கள் குறைவா கவே இருக்கும். தேகசுகம், குடும்பசுகம் என்பன இடையிடையே பாதிக்கப்படக்கூடும். பணவரு வாய், முன்னேற்றம் என்பன எதிர்பார்த்த மாதிரி அமையாது. நண்பர், உறவினர்களின் ஒத்துழைப்பும் கிட்டாது. பெரியோரின் அவப் பெயருக்கும் ஏதுவாக நேரிடலாம்.

## மீனம்

மீனராசியினருக்கு இராகு, கேதுக்கள் தாம்ர மூர்த்தியாக 11-ம், 5-ம் இராசிகளில் பவனி வரு கின்றன, ஒன்றரை வருடகாலத்துக்கு கஷ்ட பலன்களே இவர்களுக்குத் தென்படுகின்றன. மறைமுக எதிர்ப்புக்களும், பந்தபாசங்களில் விஷ மத்தனங்களும் காணப்படும். தேகசுகமும், மன நிம்மதியும் குன்றியிருக்கும். காதல் விடயங்களி லும் தோல்வி ஏற்படும். தொழில் துறையிலும் செலவீனங்களும், எதிர்ப்புக்களும் ஏற்படலாகும். தன்னலமற்ற சேவையும், தெய்வவழிபாடும் கைகொடுக்கும்.

# இவ்வருட மஹாநவமி விஜயதசமி எப்போது?

எஸ். இராசலிங்கம், யப்பாம, லுணுகலை.

சந்:- செவ்வாய் தோஷம் எத்தனை வகை? அதை நிவிர்த்தி செய்ய தோஷம் இல்லாத ஆணை அல்லது பெண்ணை திருமணம் செய்தால் கெடுதி ஏற்படுமா? தோஷம் நிவிர்த்தி செய்யப்பட வழி என்ன?

நிவி:- ஒரு ஜாதகத்தில் லக்கினத்திற்கு 2,4,7,8,12-ம் இடங்களில் செவ்வாய் இருந்தால் தோஷம் என்று கருதப்படும். ஆனுற் துவாதச பாவஸ்புட ரீதியில் அது கணித்துப் பார்க்கப் படல் வேண்டும். சில ஜாதகங்களில், மேல் குறிப் பிட்ட இடங்களில் செவ்வாய் இருப்பினும் சில வேறு காரணங்களால் அதனுல் ஏற்படும் தோஷம் சாந்தியாகவும் வழியுண்டு. இவ்விடயம் இவ்வருட திருக்கணித பஞ்சாங்கம் 24-ம் பக்கத் தில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விபர மாகத் தெரிந்து கொள்க. செவ்வாய் தோஷ முடையவர்கள் செவ்வாய்க்கிழமை தோறும் விரதமனுஷ்டிப்பதோடு சுப்பிரமணியப் பெரு மானை வழிபட்டு வருதல் நன்மை பயக்கும்.

## சந்தேக நிவிர்த்தி "உத்தரம்"

ஏ. உதயச்சந்திரன், ஏழாலை.

சந்:- இவ்வருடம் மஹாநவமி, விஜயதசமி என்பன திருக்கணித பஞ்சாங்கப்படி அக்டோபர் மாதம் 9,10-ம் திகதிகளிலும்; வாக்கிய பஞ்சாங் கப்படி அக்டோபர் மாதம் 8,9-ம் திகதிகளிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிலும் சரி யானது எது? எதை நாம் கைக்கொள்ள வேண் டும்? விளக்கம் தரவும்?

நிவி:- திருக்கணித பஞ்சாங்கத்திற்கும், வாக்கிய பஞ்சாங்கத்திற்கும் அடிப்படையாக கிர கங்களின் கதிபேதம் முதலியவற்றால் தித்யாதி கணனங்களில் (திதி முதலியவற்றில்) அமாவா சையை அண்டிய நாட்களில் சொற்ப வித்தியா சமும், ஏனைய நாட்களில் அதிக வித்தியாசமும் ஏற்படுகின்றது இவ்வாறு அதிக வித்தியாசம் ஏற்படுகின்ற பொழுது இதன் காரணத்தால் விரதாதிகளுக்குரிய வியாபகங்களும் நாள்கணக்கில் வேறுபடுகின்றன. மஹாநவமிக்கு சாயங்காலத் தில் நவமியும், விஜயதசமிக்கு சாயங்காலத்தில் தசமியும் வியாபித்திருக்க வேண்டும். விஜயதச மிக்கு திருவோணம் சேர்ந்திருப்பது அதற்கு மேலும் விசேஷமாகும். இவ்வருடம் அக் 10-ம் திகதி திருக்கணித பஞ்சாங்கப்படி தசமி மாலை 5-00—7-00 வரை வியாபித்திருக்கின்றது. அன்று திருவோணமும் மாலை 4-56 வரை, வியாபித்தி ருக்கிறது. ஆகவே அன்றைய தினம் விஜயதசமி யும் முதல்நாள் மாலையில் நவமி கூடியுள்ளதால் முதல்நாளன்று மஹா நவமியும் கொள்ளுவதே சிறப்பானதும் சரியானதும் ஆகும்.

பாரத தேசத்து மாதஜோதிடம் மணி பஞ் சாங்கம், பாலஜோதிடம், கும்பகோணம் மடத் துப் பஞ்சாங்கம், பாரத் கணித பஞ்சாங்கம், லாகிரி எபமெரிஸ், ஞானபூமி பஞ்சாங்கம் (ஏப் ரில் இதழ்) என்பனவற்றிலெல்லாம் திருக்கணித பஞ்சாங்கப்படியே அக். 9,10-ம் திகதிகளில் முறையே மஹாநவமியும், விஜயதசமியும் குறிக் கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

எனவே பழைய வாக்கியங்களைத் திருத்தங்க ளில்லாமல் உபயோகித்து அடிப்படைக் கணித முறைப் பிழையால் வரும் தவறுன விரதாதி அம்சங்களைக் கைக்கொள்ளாமல்; கணித நுட்பத் தோடு கணிக்கப்பட்ட திருக்கணித விரதாதி அம்சங்களை முறைப்படி உரிய காலத்தில் ஒழுகி விரதாதி பலன்களை பெற்றுய்யவும்.

ச. காளிதாசன்,
டியோஸ்ரன் பிளேஸ், கொழும்பு-3

சந்:- ஜாதகத்தில் இராசிகள் சூன்யமாகும் விதிகள் யாவை?

நிவி:- ஜாதகத்திலுள்ள சூன்யராசிகள் அல் லது தக்தராசிகள், அல்லது எரிந்த வீடுகள் என்பதைப் பற்றிய விளக்கங்கள் சுக்ல ஸ்ரீ வைகாசி ஆனி மாத சோதிடமலர் இதழ்களில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

குறிப்பு;- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட் காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் கீழே குறிப்பிட்ட விலாசத்தை வெட்டிஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

"சந்தேக நிவிர்த்தி" சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

# ஆய்வுமன்றம்

சுரனுதா, தாஸ், தலதா வீதி, கண்டி.

உங்களுக்கு 1989-01-12 வரை சனிதசை சனி புத்தி நிகழ்ந்தது. தற்போது சனிதசை புதன் புத்தி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இக்காலத்தில் மங்கல காரியங்கள் கைகூட இடமுண்டு. ஜாதகத்தில் தங்களுக்கு குறிப்பிடக்கூடிய தோஷம் எதுவுமில்லை. ஆயினும் சனி குடும்பஸ்தானத்தில் இருப்பதால் சனிக்கிழமை தோறும் சனீஸ்வரனுக்கு எள் எண்ணெய் எரித்து அல்லது சனீஸ்வரனை நீலப்பூவால் அர்ச்சித்து வழிபாடு செய்து வருதல் நன்மை பயக்கும்.

சு. காயத்திரி, பொன்னாலை, சுழிபுரம்.

உங்களுக்குத் தற்போது சந்திரன்தெசை வியாழன் புத்தி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. 1989-ம் வருட முடிவுக்குள் மங்கல கருமங்கள் கைகூடச் சாத்தியமுண்டு. திருமணம் சொந்தமற்ற இடத்திலேயே கைகூடிவரலாம்.

சு. மயில்வாகனம், தையிட்டி, காங்கேசன்துறை.

குழந்தையின் ஜாதகப்படி உங்களுக்கு பொதுவாக நன்று. ஆயினும் ஏழரைச்சனியின் நடுப் பகுதி நிகழ்ந்து கொண்டிருப்பதால் சனி வழிபாடுகள் செய்துவரல் நன்று.

த. ஸ்ரீஹரன் கொழும்பு - 6

தங்கள் ஜாதகத்தில் 7-ல் சனி இருப்பதும், களத்திரகாரகன் 12-ல் மறைவதும், விவாகவிடயத்தில் காலதாமதத்தை ஏற்படுத்தும். 1990 வைகாசி மாதத்தின்மேல் திருமணம் கைகூட இடமுண்டு. சனிக்கு வழிபாடு செய்து வருதல் நன்று. குடும்பவாழ்க்கை சுமுகமாக அமையும்.

வி, நவரத்தினராசா தங்கோடை, காரைநகர்.

உங்களுக்கு 1990 மார்ச் மாதத்தின் மேல் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு. ஆயினும் நிரந்தரமான தொழில் உள்நாட்டிலேயே.

சி. விஜயரத்தினம் K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுடைய ஜாதகப்படி கோசரரீதியாக அட்டமத்துச்சனி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எதிர்வரும் பங்குனி மாதம் இது நீங்கும். பங்குனி மாதத்தின் மேல் தொழில் வருவாய் சிறக்கும்.

எஸ். ஜானகி, மானிப்பாய்.

உங்கள் ஜாதகத்தில் குடும்பஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதும் அது சனியின் பார்வையைப் பெறுவதும் சிறப்பல்ல. வாழ்க்கை சுமுகமாக அமைவது கடினமே. புத்திரகாரகன் நன்குகவுள்ளதால் புத்திர பாக்கியம் உண்டு.

பிரியசாமி ஜோசப், கல்முனை.

தங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் ராகு இருப்பதால் கடின உழைப்பின் மத்தியிலேயே தொழிலும் வருவாயும் ஏற்படும். தனித்தொழிலில் முன்னேற்றமடையும் வாய்ப்புகள் அரிதாகவே அமைந்திருக்கிறது. வியாபாரம் சம்பந்தமான தொழிலில் ஈடுபடலாம்.

வ. சிவகுமார், மந்துவில், கொடிகாமம்

உங்களுடைய ஜாதகத்தில் வெளிநாட்டில் வேலைசெய்யும் வாய்ப்புக்கள் குறைவாகவே தென்படுகிறது.

S.H.M. றசீன் கல்முனை.

உங்கள் ஜாதகத்தில் வருவாய் ஸ்தானத்தில் பாபக்கிரகம் குடிகொண்டிருப்பதால் வருவாய்ப் பாக்கியம் போன்றன ஒரு மட்டமாகவே இருக்கும். ஆயினும் அதிக கஷ்டமில்லாமல் வாழ்க்கை அமைந்திருக்கும்.

அ. முரளிகிருஷ்ணன்
பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

தங்களுக்கு வியாபாரம் சம்பந்தமான தொழில் நன்மைதரும். வியாபாரத்திலும் ஆடம்பரப்பொருள் வியாபாரம் சிறப்பானதாகும். அல்லது ரெக்ஸ்ரைல்ஸ் ரீதியானவையும் மேற்கொள்ளலாம்.

வ. சிவகுமார் மந்துவில், கொடிகாமம்.

உங்களுக்கு 1990 ஏப்ரல் மாதத்தின்மேல் வியாழன்தெசை ஆரம்பிக்கும். அதன்மேல் நிரந்தரமாகத் தொழில் செய்யலாம். அதற்கான வாய்ப்புகள் நன்று.

சி. சண்முகநாதன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

நீங்கள் அனுப்பியிருந்த உங்கள் மகனின் பிறந்த தகவல்களின் படி மகனின் நக்ஷத்திரம் புனர்பூசம் 1-ம் கால், எனவே இராசி மிதுனம், இலக்கினம் கடகலக்கினம்.

எஸ். சரஸ், பருத்தித்துறை.

தாங்கள் 1993ல் சனிதெசை ஆரம்பிக்குமெனக் குறிப்பிட்டுள்ளீர்கள். விருச்சிக லக்கினத்திற்கு சனி நற்பலனைக் கொடுக்கக்கூடியவர் அல்லர். எனினும் சனி சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதால், ஓரளவு நற்பலன்களை எதிர்பார்க்கலாம். 7ல் சனி இருந்தாலும் 7ம் அதிபதி 5ல் உச்சம் பெற்றிருப்பது, இளம்வயதில் விவாகம் ஏற்படக்காலானது.

எம். பாக்கியம், தும்பளை, பருத்தித்துறை.

உங்கள் ஜாதகப்படி 7-ம் வீடு சனியின் வீடாக அமைவதால் மகிழ்ச்சியான குடும்பம் வாய்க்க வாய்ப்பில்லை. தற்போது நிகழும் ராகு தெசை விவாக விடயத்திற்கு உகந்ததே. ராகு குடும்பஸ்தானமான சூரியனின் நட்சத்திரத்திலிருப்பது இதற்கு ஏதுவானது. புதன் புத்தி முடிந்து கேது புத்தியில் மங்கல கருமம் கைகூட இடமுண்டு.

கே. இராஜலட்சுமி, பருத்தித்துறை.

உமது கிரகநிலைப்படி 7-ம் அதிபதியும் 5-ம் அதிபதியும் ஒன்று சேராமலிருப்பதனால் காதல் திருமணத்திலே சிரமங்கள் இடைமறிக்கும். சூரியனும், செவ்வாயும் 5-ம் இடத்தில் ஒரேபாகையிலிருப்பதும் திருமண விடயத்திற்கு சாரியாக இல்லை. செவ்வாய் தெசையில் திருமணம் கைகூடலாகும்.

யோ. யோ. யோகராசா,

தொழில்நுட்பக் கல்லூரி, சம்மாந்துறை.

நீங்கள் அனுப்பியிருந்த; உங்கள் ஜாதகப்படி சனி மகாதெசையில் ராகுபுத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது 1990 ஜூலைவரை நடைபெறும். அதன்மேல் பதவியுயர்வு ஏற்பட இடமுண்டு,

த. ஸ்ரீஹரன், கொழும்பு 6.

கேதுதெசை தொடங்கிய பின் வெளிநாடு சென்று குடியேறும் வாய்ப்பு உண்டு. அதாவது தாங்கள் குறிப்பிட்டபடி 1989 டிசம்பரின் பின்னர் வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு.

பொ. தர்மபாலா, டச்சுறோட், சாவகச்சேரி.

உங்கள் தகவல்களின்படி நீங்கள் வெளிநாடு செல்லக்கூடிய வாய்ப்புக்கள் தற்பொழுது தென்படவில்லை. 1989 டிசம்பரில் உள்நாட்டில் வேலை வாய்ப்பு கைகூடலாம்.

---

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு, பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் பூரணமாக நிரப்பப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படா. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ..............................................

தமிழ் ..............................................

,, நேரம்: ..............................................

,, இடம்: ..............................................

நட்சத்திரம்: .............................................. ம்-பாதம்

கிரகநிலை

ஜனனகாலம்....................... தசை இருப்பு

வரு...........மா..........நாள்..........

..............................................

கையொப்பம்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.

[illegible]

[illegible]

எமது [illegible]

[illegible]

Edited by K. [illegible] Sarma; Printed and Published by S. [illegible] Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Period [illegible]

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.




எண்ணெயிட்டு முழுகுவதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

உடல்வலி நீங்குகிறது. இளமையைப் பாதுகாக்கிறது.
முதுமையை விரட்டியடிக்கிறது. கண்களைப் பாதுகாக்கிறது.
பார்வையைப் பிரகாசமாக்குகிறது. உடலுக்கு வலிமையைத் தருகிறது.
ஆயுளை விருத்தி செய்கிறது. நல்ல தூக்கத்தை உண்டாக்கிறது.
தோலை மிருதுவாக்கிறது. உடல் சோர்வை அகற்றுகிறது.
கபத்தை நீக்குகிறது. பல்லில் ஏற்படும் நோயைத் தடுக்கிறது.
சுவையின்மையை மாற்றுகிறது.

எண்ணெய் முழுக்குக்கு உகந்த
**ஒலிவ் ஸ்நானப்பவுடரை**
வாங்கி உபயோகியுங்கள்.

விலை ரூபா:
1/- மட்டுமே

**மில்க்வைற் தொழிலகம்**

த. பெ. இல. 78, யாழ்ப்பாணம். தொலைபேசி 23233

## எம் இனிய அன்பு நெஞ்சங்களே!

உங்கள் கரங்களில் தவழ்ந்துவரும் இச் சோதிடமலர் என்றென்றும் வாடாமல் இனிய நறுமணம் வீசி சோதிட உலகின் திசைகாட்டியாகவும், நிர்க்கதியாளரின் நிதர்சனமாகவும், ஆதரவாளரின் அனுதுணையாகவும் தொடர்ந்தும் இருந்து வரச் செய்வது வாசகப் பெருமக்களாகிய உங்கள் கடமையல்லவா? இம்மலர் உங்கள் இல்லந்தேடிவர இன்றே சந்தாதாரராகுங்கள். இதுகாறும் சந்தாவைப் புதுப்பியாதவரும் சந்தாப்பணத்தைச் செலுத்திப் புதுப்பித்து நாளொரு பொழுதும் பெருகிவரும் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் இம்மலர் வெளிவர ஊக்கமளிக்க வேண்டுகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருடசந்தா ரூ | 54-00 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல்வழி) | வருடசந்தா ,, | 90-00 |
| | மலேசியா (விமானவழி) | வருடசந்தா ,, | 192-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருடசந்தா ,, | 237-00 |

தனிப்பிரதி வேண்டுவோர்: ரூபா 4-50க்கு காசோலையோ, தபாற்கட்டளையோ அல்லது முத்திரையோ அனுப்பிப் பெற்றுக்கொள்க

கடிதம் முதலியன அனுப்பப்பட வேண்டிய முகவரி:
முகாமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

**Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam. Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280**